# வெற்றிமணி

1971

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நங்கையர் விரும்பும் நவநாகரீக
* நகைகளுக்கும் * வைரங்களுக்கும்
புகழ்பெற்று விளங்கும் ஸ்தாபனம்

கே. என். எம்.

# மீருன் சாஹிப்

— தங்கப்பவுண் நகைமாளிகை —

கன்னுதிட்டி தொலைபேசி: 585 யாழ்ப்பாணம்.

# K. N. M. Meeran Sahib

JEWELLERS & DIAMOND MERCHANT

— SOVEREIGN PALACE —

Kannathiddy, *Dial:* 585 JAFFNA.

## புது வருடக் கலண்டர்

பின் வருவனவற்றில் ஏதேனும் ஒரு
பகுதியை அனுப்பிப் பெற்றுக்
கொள்ளலாம்.

50 மில்வைற் நீல சோப் மேலுறைகள்

10 பார் சோப் மேலுறைகள்

10 சலவைப் பவுடர் மேலுறைகள்

தேவரப் புத்தகங்கள் பெறவிரும்புவோர் மில்க்வைற்
நீலசோப் மேலுறைகள் 10வீதம் அனுப்பிப்
பெற்றுக் கொள்ளலாம்.

**மில்க்வைற் சோப் தொழிற்சாலை**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கௌரவ ஆசிரியர்: மு. க. சுப்பிரமணியம்

# வெற்றிமணி

## விளம்பர விகிதம்

| | | |
|---|---|---|
| வெளி அட்டை | ரூபா | 75-00 |
| உள் அட்டை | ரூபா | 60-00 |
| முதற் பக்கம் | ரூபா | 50-00 |
| உட் பக்கம் | ரூபா | 40-00 |

தொடர்ந்து விளம்பரஞ்செய்யின் 15 வீதக் கழிவுண்டு.

விபரங்களுக்கு எமக்கு எழுதுக.


வெற்றிமணி
253 1/1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (இலங்கை)


★

## வருடச் சந்தா

பொங்கல் மலர்
தபாற் செலவுட்பட

| | | |
|---|---|---|
| இலங்கை | ரூபா | 5-00 |
| இந்தியா | ரூபா | 6-00 |
| மலாயா | $ | 6-00 |

## ஆலோசகர் குழு


இரசிகமணி
கனக. செந்திநாதன்

வி. கந்தவனம் B. A.

ஏ. ரி பொன்னுத்துரை B. A.

காரை.
செ. சுந்தரம்பிள்ளை B. A.


★

கடந்த எட்டு ஆண்டுகளாக

வெளிவரும்

ஈழத்துச் சிறுவர்

மாதப் பத்திரிகை



வெற்றிமணி டாண் எனவே விண்முட்ட ஒலித்திடுவாய்
நற்றமிழாம் எங்கள் மொழி நலமுற ஒலித்திடுவாய்.


| மலர் 8 | 15 - 1 - 71 வெள்ளிக்கிழமை | இதழ் 9 |
|---|---|---|


## ஆற்றல் வாய்ந்த பேராசிரியர்

கலாநிதி சு. வித்தியாநந்தன் அவர்கள் பேராதனையிலுள்ள இலங்கைப் பல்கலைக் கழகத்துக்குத் தமிழ்த்துறைப் பேராசிரியராக்கப்பட்டிருக்கின்றார்.

கலாநிதி சு. வித்தியாநந்தன் அவர்கள் சிறந்த அறிஞர்; நிறைந்த பண்பாளர்; உயர்ந்த நோக்கமும் ஊக்கமும் உள்ளவர்; அஞ்சாநெஞ்சர்; துஞ்சாவீரர்; நாட்டுக்கூத்தை ஏட்டிலே இட்டவர்; அண்ணாவிமார்களைக் கண்ணுக மதிப்பவர்; நாடகக் கலையதன் நாடியை உணர்ந்தவர்; நாளும் பொழுதும் நாடகக் கலையை மேன்மைப்படுத்தி வருபவர்.

இவ்விதம் பல்லியல் தகைமைகளும் நல்லியற் பண்புகளும் நிறைந்த ஒரு கலைஞர் தமிழ்த் துறைப் பேராசிரியராக நியமிக்கப்பட்டிருப்பது தமிழ் செய்த தவம்; தமிழர் செய்த பெரும் பேறு.

தமிழ் மேலும் வளம்பெறும்; தமிழ்க் கலைகள் நாளும் வளர்க்கப்படும்; தமிழர் தனித்துவம் நிலைநாட்டப்படும் என்ற நம்பிக்கையால் பேராசிரியர் அவர்களின் நியமனங் குறித்து மகிழ்ச்சியடைகின்றோம், வாழ்க; வெல்க! என்று வாழ்த்துகின்றோம்.

— ஆசிரியர்,




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பென்சன்' எடுத்த பிறகு....

—: இரசிகமணி கனக. செந்திநாதன் :—

ஐம்பத் தைந்தாவது வயதிலே கட்டாய ஓய்வு. பென்சன். இதுதான் ஈழத்து மக்கள் ஒவ்வொருவர் வாயிலும் இப்போது அடிபடும் பிரச்சினை. நாளை முதல் ஓய்வு! நானென்ன செய்ய!! நான்கு பிள்ளைகள் படிக்கிறார்கள். ஒரு பிள்ளை பல்கலைக் கழகத்தில். ஒரு பிள்ளை தொழிற் கல்லூரியில். மற்ற இரண்டுபேர் உயர் வகுப்புகளில். இந்தப் பென்சன்காசு எந்த மூலைக்கு? என்று முணுமுணுக்கும் ஆசிரியர்களை, உத்தியோகத்தனை வழி எங்கும் காணுகின்றோம். உண்மையில் சிந்திக்கவேண்டிய விடயந்தான். ஆனால் சிலர் தங்கள் பதவி - அதிகாரம் - மிடுக்கு இவையெல்லாம் போய்விட்டதே என்று தான் முழு மனவருத்தப்படுகிறார்கள். நித்தம் பல்லிளிக்கும் பாதந்தாங்கிகள் வரமாட்டார்களே, தம்மைத் தொழமாட்டார்களே என்று தான் கவலைப்படுகிறார்கள். சோம்பேறிக் கட்டிலில் சுகமாகத் தூங்கி நேரத்துக்குச் சாப்பிட்டு நிம்மதியாகக் காலத்தைக் கழிக்க - கடவுளைக் கும்பிட - இது ஒரு வாய்ப்பு என அவர்கள் எண்ணுவதாகக் காணோம். 'நாளைமுதல் பென்சன்' என்று சொல்லும் தொனியிலேயே எதையோ இழந்துவிட்ட சோகம் தொனிக்கிறது. பெரிய உத்தியோகத்தில் அமர்ந்து ஓய்வுபெற்ற ஒரு அதிகாரபுருடர் - அவர் புலவருந்தான் - தமது நிலைமையைச் சற்று நகைச்சுவையாகப் பாடியுள்ளார். பாடல்களைக் கேளுங்கள்:-

அவர் உத்தியோகத்தில் இருந்தபோது பலர் அவரைத் தரிசிக்க வந்தனர். வந்தவர்களிற் பலர் தேவையற்றவர். சிபார்சுக்காக வந்தவர். வாசலிலே சேவகன் தடியை வைத்துக்கொண்டு, 'இப்போது ஐயாவைப் பார்க்க முடியாது' என்று ஓட்டினாலும்அசையாமல் நின்றவர்கள் - பல்லிளித்தவர்கள் இன்று எங்கே? பென்சன் எடுத்த பிறகு பார்க்க வந்தார்களா? என்றால் இல்லை. இல்லவே இல்லை. இன்று பாக்கு வெற்றிலை தேநீரோடு வாருங்கள் வாருங்கள் என்று அழைத்தாலும் வருகிறார்களில்லை. ஏதேதோ சாக்குப்போக்குச் சொல்லிவிட்டு ஓடுகிறார்கள். இதை நினைக்க அவருக்குச் சிரிப்புச் சிரிப்பாய் வருகிறது. அவர்



ஒரு நல்ல முடிவுக்கு வந்து விட்டார். 'இனிமேலாவது சிற்றினம் சேராமல் கடவுள் தொண்டு செய்து நிம்மதியாக இருக்கலாம்' என்பதுதான் அவர் முடிவு. பாடல் அருமையானது. நெஞ்சில் நிற்கக்கூடியது.

தண்டுகொண் டோட்டினும் போகாமல்
நம்மைத் தரிசிக்கவே
பண்டுவந் தோரின்று தாம்பூலம்
வைத்துப் பரிந்தழைத்துந்
திண்டுமிண் டுஞ்சொல்லி வாரா
திருந்தனர் செய்கையெல்லாம்
கண்டுகொண் டோம்இனித் தொண்டுகொண்
டோம்நல் கடவுளுக்கே.

அவர் அப்பாலும் சொல்லுகிறார். என்னிடமிருந்து என்ன போய்விட்டது? குற்றம் பல கொண்ட உத்தியோகம் போய்விட்டது. உண்மை. அதனோடு எல்லாம் போய் விட்டதா? அறிவு, ஒழுக்கம், சுகம் இவை போய்விடவில்லையே. இதுமட்டுமா? முன்பு பேசிய நாகூட அப்படியே இருக்கிறது. பழைய நட்பினரும் அப்படியேதான் இருக்கிறார்கள். எங்கள் வீட்டுக் கதவு பூட்டப்படாமல் எப்போதும் திறந்துதான் இருக்கிறது. என்ன புதுமை! ஒரு மனிதர்கூட இந்தப்பக்கம் திரும்பிக்கூடப் பார்க்கின்றார்களில்லையே. எல்லாம் வெளிவேஷம்! என்கிறார் அவர்.

தோமிருந்த தொழிலொன்றே தொலைந்ததன்றி
அறிவொழுக்கம் சுகங்களோடு
நாமிருந்தோம் உரையாட நாவுமிருந்
ததுபழைய நட்பினோருந்
தாமிருந்தார் அவர்நடக்கத் தாளுமிருந்
தனஇடமும் தடையொன்றித்
தேமிருந்த நம்வீடு திறந்திருந்தும்
அவர்வாராச் செய்கையென்னே.

பென்சன் எடுத்தபிறகு உள்ள நிலையை அப்படியே படம் பிடித்ததுபோற் காட்டிய புலவர் யார் தெரியுமா? பிரதாப முதலியார் சரித்திரம், சர்வசமய சமரசக் கீர்த்தனை என்னும் அருமந்த நூல்களின் ஆசிரியராகிய வேதநாயகம் பிள்ளை அவர்களேயாவர்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன் விழாவுக்குப் பின் இரசிகமணி

ஏ. ரி. பொன்னுத்துரை

'தானுண்டு தன் வீடுண்டு' என்ற நிலையில் தனது வாழ்வை அமையாது, இலக்கியம் கலை என்று சதா மக்கள் மத்தியில் சுழன்று கொண்டிருப்பவர் இரசிகமணி கனக. செந்திநாதன் அவர்கள். 'எழுத்துத் துறையில் எல்லாம் தெரிந்தவர்', 'நாடறிந்த எழுத்தாளர்', 'புதுமைக்கும் பழமைக்கும் பாலமாய் அமைந்தவர்' அது இது என்று பல புகழ்மாலைகளை இலக்கிய இரசிகர்களிடம் பெற்றவர். இவரது பொன்விழாவை 1967-ம் ஆண்டு ஐப்பசி மாதம் குரும்பசிட்டி சன்மார்க்கசபை மண்டபத்தில் யாழ். இலக்கிய வட்டம் கோலாகலமாக எடுத்தது. அப்போதைய பாராளுமன்ற உப சபாநாயகர் திரு. மு. சிவசிதம்பரம் (பா. உ. உடுப்பிட்டி), உடுவில் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம், மற்றும் மக்கள் கவிமணி மு. இராமலிங்கம், பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி, முன்னாள் சைவாசிரிய கலாசாலை அதிபர் திரு. சுவாமிநாதன் உட்படப் பல பிரமுகர்கள், எழுத்தாளர்கள், கலைப் பெருமக்கள் அணி செய்ய இவ் விழா ஈடும் எடுப்பும் அற்ற முறையில் நிகழ்ந்தது.

'வெண் சங்கு' என்ற சிறுகதைத் தொகுதியும், 'பிரபந்தப் பூங்கா' என்ற வானொலிப் பேச்சுகள் அடங்கிய நூலும் அவரது படைப்புக்களாய் அன்றைய தினம் வெளிவந்தன. இவரைப்பற்றிப் பல கலைஞர்கள் தீட்டிய எழுத்தோவியங்கள் 'இரசிகமணி மலர் மாலை' என நூலுருப் பெற்று வெளியிடப்பட்டது. கலைஞர்கள் வாழும்பொழுதே வாழ்த்தப்படல் வேண்டும் என்ற புது மரபுக்கு அமைய இப் பொன்விழா புதுப்பொலிவுடன் நடந்தது. இவ் விழாவுக்கு நன்றி தெரிவித்து இரசிகமணி அவர்கள் பேசும்போது, 'தனது இலக்கிய வாழ்வைத் திசை திருப்பி வேறு பாதைக்குக் கொண்டு செல்லவேண்டிய நிலையில் உள்ளேன்' என்று கூறினார். இவரது உடல் நலக் குறைவையும் மனதிற்கொண்டு, சிலவேளை இவர் கூறுவதுபோல் நடந்துவிடுவாரோ என்று சிந்தித்தவர்களில் நானும் ஒருவன். ஆனால் அவரது இதயத்தில் இலக்கியம் ஒலிக்கிறது; பேச்சில் மூச்சில் இலக்கியம் பிரவாகிக்கிறது. அப்பிரவாகத்தைத் தடுத்து நிறுத்த எவராலும் முடியாது என்ற முடிவை அவர் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் ஆற்றிய இலக்கியப் பணி உறுதிப்படுத்துகின்றது; ஆமாம் இன்றும் அவர் கலகலப்பாக – குதூகலமாக – உறுதியாக ஊடாடுவதே அவரது இலக்கிய உணர்வு அவருக்குப் பாய்ச்சிய தென்பினுலேயே.

பொன் விழாக் கண்ட பலர் அவ் விழாக்களுக்குப் பின் தமது துறைக்கே முற்றுப் புள்ளி வைப்பதுண்டு. ஆனால் இரசிகமணியைப்



பொறுத்தமட்டில் அவரது பேனா துரிதமாகவே எழுதிக் குவித்திருக்கிறது. 'ஈழம் தந்த கேசரி' - 'நாவலர் அறிவுரைகள்' - 'அருமைக் குழந்தைகளுக்கோர் அம்பிப் பாடல்' - 'ஈழத்து நூல்களின் அட்டவணை' - 'கோ. நமசிவாய மலர்' என்னும் ஐந்து நூல்களை இக் குறுகிய காலகட்டத்துள் எழுதியுள்ளார். 'ஈழம் தந்த கேசரி' யில் ஈழகேசரிப் பொன்னையா அவர்களின் வாழ்க்கையை மிகமிக எடுப்பாக எழுதியுள்ளார். முதலாவது அத்தியாயம் 'சி. வை. 117' என்ற தலைப்பில் புதிய முறையில் – நவீன எழுத்துப் பாணியில் அமைந்துள்ளது. மற்றப் பகுதிகளிலும் அவரது தனி முத்திரை பளிச்சிடத்தான் செய்கின்றது. 'நாவலர் அறிவுரைகள்' என்ற தொகுப்பு நூலைக் கலையரசு சொர்ணலிங்கம் வெகுவாகப் பாராட்டினார். ஈழத்து நூல்களின் அட்டவணை ஈழத்துப் படைப்புக்கள் பற்றி ஆராய்பவனுக்கோ, அன்றி நூல் நிலையங்களுக்கு நூல்களைத் தேர்ந்தெடுப்பவனுக்கோ உதவக்கூடிய ஒரு வழிகாட்டி நூலாகும். இத்தகைய தரமான நூல்களை எழுதியவேளை கட்டுரைகள், ஆய்வுரைகள், அறிமுகம், பேட்டி, வானொலிப் பேச்சு என்பவற்றைத் தட்டிக் கழிக்கவில்லை.



யாழ். இலக்கிய வட்டத் தலைவர், இரசிகமணி அவர்களுக்கு வாழ்த்துப்பத்திரம் வாசித்து அளிக்கும் காட்சி

யாழ்ப்பாணக் குடாநாட்டைச் சேர்ந்த இருபத்தைந்து கவிஞர்களின் நல்ல கவிதைகளை மையப் பொருளாகக்கொண்டு, இலக்கியச் சுவை சொட்டும் வகையில் முப்பத்து இரண்டு கட்டுரைகளைச் சிறுவரீ மாத இதழான ''வெற்றிமணி''யில் எழுதியுள்ளார். ரசிகனுக்கு விருந்து; கவிஞனுக்கு அறிமுகம் என ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை வீழ்த்தியிருக்கிறார் இரசிகமணி. 'தங்கத் தாத்தா' எனப் போற்றப்படும் சோமசுந்தரப் புலவரது பாடல் விமர்சனம் 'ஐக்கிய தீபம்' என்ற ஏட்டில் நான்கு முறை தொடர்ந்து வந்துள்ளது. இத்துடன் 'ஈழநாடு' பத்திரிகையின் வார ஏட்டில் 'சிறுவர் பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நயம்' என்ற பகுதியைப் பதினேழு கட்டுரைகள் அணிசெய்துவிட்டன. தென்னகத்துக் கவிஞர்களும், ஈழத்துக் கவிஞர்களும் பாடிய சுவையான பாடல்களை மாணவர்களிடம் இலக்கிய ரசனையை வளர்க்கும் நோக்குடன் சுவைகுன்றுமல் நயமாக விமர்சிக்கிருர் இரசிகமணி அவர்கள். அரசு வெளியீட்டார் சென்ற ஆண்டு வெளியிட்ட 'காந்திக் கதைகள்' என்ற நூலில் இவரது 'அன்பின் ஒலி' என்ற சிறுகதையும் இடம்பெற்றுள்ளது. இவரின் எழுத்தோவியங்களான 'காயும் கனியும்', 'விளக்கின் கண் விளக்கு', 'பிள்ளைத்தமிழ்', 'சைவம் வளர...', 'பிற்காலச் செய்யுட்கள்', 'சமூக நாடகங்கள் வேண்டும்' என்பன பண்டிதர் கா.பொ. இரத்தினம் அவர்கள் வெளியிட்ட 'திருவள்ளுவர் மகாநாட்டுமலர்' மற்றும், தினகரன் விசேட மலர், சைவநெறி என்ற மலர்களில் மணம் வீசுகின்றன. இத்துடன் ஓய்ந்ததா இவரது பேனு? இல்லவே இல்லை. மனுஷன் என்ன மாதிரித்தான் எழுதித்தள்ளுகிருரோ என்று எண்ணுமளவுக்கு தொடர்ந்து தொடர்ந்து எழுதுகிருர்.

புத்தக ஆய்வுரைகளாகப் பொன்விழாவுக்குப் பின் அவர் எழுதியவை எத்தனையோ. சொக்கனின் 'அறநெறிப் பாமஞ்சரி' தில்லைச் சிவனின் 'தாய்', மலேசிய வெளியீடான 'மணிக் கதைகள்', கவிஞர் காரை சுந்தரம்பிள்ளையின் 'தேனுறு', கவிஞர் கந்தவனத்தின் 'கீரிமலையினிலே', யாழ்வாணனின் 'அமரத்துவம்', பொன். கிருஷ்ணபிள்ளை அவர்களின் 'இலக்கியச் சோலை'. எனது 'நாடகம்' என்ற நூல்களுக்கு ஆய்வுரைகள் எழுதினுர். இவரது ஆய்வுரைகளை நூலுருப் பெறச் செய்தாலே அது இலக்கியம்பற்றி எத்தனையோ அம்சங்களைப் பேசும். இதைவிட இவர் மக்கள் கவிமணி மு. இராமலிங்கம், பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி, கலையரசு, கல்லடி வேலுப்பிள்ளை, வாசன் அழகிரிசாமிபற்றி எழுதிய அறிமுகக் கட்டுரைகள் அறியமுடியாத பலவற்றை அறிவிக்கின்றன. எழுத்துடன் மட்டும் விட்டுவிடாது கோப்பாய் மகளிர் கல்லூரி, பலாலி கனிஷ்ட பல்கலைக் கழகம் உட்படப் பல நிறுவனங்களில் சொல்மாரி பொழியவும் தயங்கவில்லை.

இந்தப் பாரிய வேலைகளுக்குள்ளும் கொழும்பு சென்று வானெலிப் பேச்சுகளாக ஈழத்துத் தனிப் பாடல்கள் (நான்கு தொடர்) கல்லடி வேலுப்பிள்ளை என்பவற்றை ஈழத்து ரசிகர்கள் வியக்கும் வகையில் நிகழ்த்திஞர். இத்துடன் இவரது 'பட்டத்து முச்சை அறுந்துவிட்டது!' என்ற சிறுகதையும், 'வாசலிடைக் கொன்றை மரம்' 'ஒரு கொத்து அரிசி' என்ற நாடகங்களும் வானெலியில் இடம்பெற்றன என்பது குறிப்பிடத்தக்கது.

இவரது சிந்தனை - பேச்சு - எதிலுமே இலக்கிய உணர்வு பீறிட்டுப் பாய்கிறது. பொன் விழா முடித்த பின்னும், உடல் நலம் பாதிக்கப்பட்ட பின்புங்கூட மூன்று ஆண்டுகளுக்குள் இவ்வளவையும் எப்படித்தான் சலிப்பில்லாமல் உயரிய முறையில் சிருஷ்டித்தாரோ? இவரது உத்வேகம் - உணர்ச்சி எம்மிடையும் பீறிடுமாஞல்.........?



திருச்சிற்றம்பலம்

இந்திய மண்ணில்

# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

(பம்பாய் நகரிலிருந்து வெளிவரும் பிரசித்திவாய்ந்த பவான் சஞ்சிகையின் (Bhavan's Jeurnal) — 10-8-1969 விசேட மலரில் "ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்" என்ற தலைப்பின்கீழ் திரு. ம. சி. சிதம்பரப்பிள்ளை, கொழும்பு அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட கட்டுரையின் தமிழாக்கம்)

### நூற்றுண்டுத் தினம்

இலங்கைவாழ் தமிழ் மக்கள் பொதுவாகவும், சைவசமய மக்கள் சிறப்பாகவும், தங்கள் அன்புக்கும் ஏகோபித்த கௌரவத்துக்கும் பாத்திரமான கல்விக் கடலாம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களுடைய நூற்றுண்டு விழாவை இத்தினத்திற் கொண்டாடுகின்றுர்கள். 'நாவலர்' என ஈழநாட்டிலும், தாய்நாட்டிலும், யாவராலும் பாசத்துடனும் கௌரவத்துடனும் அழைக்கப்பட்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள், யாழ்ப்பாணப் பட்டினத்துக்கு அருகாமையிலுள்ளதும், பெருமைவாய்ந்த பழைய இராஜதானியாகவும் விளங்கிய நல்லூர் எனும் நற்பதியில் சகல செல்வங்களும் நிறைந்த ஒரு உயர் குடும்பத்தில், 1822-ம் ஆண்டு கார்த்திகைத் திங்கள் 22-ம் நாள் அவதரித்தார்.

### வளரும் பயிரை முளையிற் தெரியும்

பிறக்கும்போதே மேதாவிலாசம் உடையவராகையினுல், இவரது தந்தையார் பாடி அரைவாசியில் விட்டுப்போன ஒரு நாடகத்தைத் தமது ஏழாம் வயதில் பூர்த்தி செய்தார். இளமையில் இவரது அதி உயர்ந்த விவேகத்தைக் கவனித்த இவரது ஆசிரியர்கள் — அக்காலம் பணம் படைத்தவர்களே தம் மக்களுக்கு ஆங்கிலக் கல்வியை ஊட்ட வசதிபடைத்தவர்களாக இருந்தார்களாகையினுல் — இவருக்கும் ஆங்கிலக் கல்வியை அளிக்க வேண்டுமெனக் கூறினர்.

### பார்சிவல்துரை

நாவலர் வாழ்ந்த காலத்தில் ஆங்கில வித்தியாசாலைகள் அரிது எனலாம். ஆகவே. நாவலரின் தமையன்மார் ஆசிரியர்களின் யோசனைக்கிணங்க, அக்காலம் அமெரிக்க மிஷனரிமார்களால் யாழ்ப்பாணப் பட்டினத்தில் நடத்தப்பட்டுவந்த ஒரேஒரு ஆங்கிலப் பாடசாலையில் ஆங்கிலங் கற்க நாவலரை அநுமதித்தனர். கண்ணியம் நிறைந்த பார்சிவல்துரை என்ற பாதிரியாரே இவ்வாங்கில வித்தியாசாலைக்குப் பொறுப்பாக இருந்தார். ஆறுமுகத்துக்கு அப்போது வயது பன்னிரண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதினன்கு ஆண்டு அஞ்ஞாத வாசம்

ஆண்டவன் சித்தம்போலும்! பதினன்கு ஆண்டுகள், பார்சிவல் துரையினிடம் ஆங்கில வித்தியாசாலையில் — மனதுக்கு வெறுப்பு நிறைந்த கிறீஸ்தவ சூழலில் காலங்கழிக்க நேர்ந்தது. ஸ்ரீ ராம பிரானின் பதினன்காண்டு வனவாசம் போன்றது எனலாம். ஆறுமுகத்தின் கல்வியின் ஊக்கத்தையும் உயர்வையும் கவனித்த பார்சிவல் பாதிரியார் தனது பாடசாலை மாணவர்களுக்குத் தமிழ் போதிப்பதற்கு இவரை ஆசிரியராக நியமித்தார். சிலகாலம் சென்ற பின்பு, பாதிரியார், தாமே ஆறுமுகத்திடம் தமிழை மிகவும் பணிவுடன் கற்றூர்.

## பைபிள்

பாதிரியாருடைய விருப்பத்துக்கிணங்கி விவிலிய நூலை (பைபிள்) தமிழில் மொழிபெயாத்தார். அக்காலத்தில் சென்னையிலும் இந் நூல் மொழிபெயர்க்கப்பட்டிருந்தது. இந்த இரு மொழிபெயர்ப்பு நூல்களையும் சீர்தூக்கி ஆராய்ந்த வல்லுநர்கள், ஆறுமுகம் மொழிபெயர்த்த நூலே அதி விசேடம் வாய்ந்ததாகத் தேர்ந்தனர்.

## மத மாற்றம்

ஆசிரியரான ஆறுமுகம், தமது சொந்த சைவப்பிள்ளைகளும் மற்றும் சைவ மக்களும் எவ்வாறு மிஷனரிமாரால் மத மாற்றம் செய்யப்படுகின்றூர்கள் என்பதனை மிகவும் நுணுக்கமாகக் கவனிக்கலானுர். தங்கள் குறிக்கோளை அடைவதற்கு என்ன என்ன முறைகளைக் கையாளுகின்றூர்கள் என்பதனையும் கூர்ந்து கவனிக்கலானுர். மிஷனரிமார்களுடைய மாய வலையில் சைவமக்கள் பொருளுக்காகவும், உத்தியோகங்களுக்காகவும் வந்து விழுவதனைக் கண்ட ஆறுமுகம் கணமேனும் சகிக்க முடியாத நிலையை அடைந்தார். மிஷனரிமார்கள் தங்கள் மத மாற்றத்தை மிகவும் தீவிரமாகச் செய்வதனைக் கண்ணுற்ற நமது ஆறுமுகம் கொதித்து எழுந்தார்.

## கசடறக் கற்றல்

ஆறுமுகம் தனது சமயமாகிய சைவசமயத்தில் உள்ள சைவ ஆகம நூல்களைத் தேடிக் கற்க முடிவு செய்தார். தமது இருபத்து மூன்ருவது வயது பூர்த்தியாவதற்கிடையில், சைவசமய சம்பந்தமான எத்தனையோ அரிய, பெரிய நூல்களைத் துருவித் துருவி ஐயந்திரிபறக் கற்றுத் தெளிந்துவிட்டார். ஒருவருடைய வாழ்க்கையில் ஆற்ற முடியாத இத் தீவிரச் செயலை இவர் எவ்வாறு கற்றுத் தேறினுர் என்பது எல்லோருக்கும் என்றும் விளங்காத புதிராகவே இருந்துவருகின்றது. மேலும், இலகுவில் வாசித்து அறிய இயலாத — செய்யுள் நடையில் உள்ள எத்தனையோ தொன்மை வாய்ந்த சைவ ஆகம நூல்களைக் கசடறக் கற்றதோடமையாது,



மனனம் செய்தும் வைத்தார் என்பர். இந் நூல்களைத் தாமாகவே ஓதி உணர்ந்தார். அத்துடன் சமஸ்கிருத பாஷையையும் கற்றுப் பண்டிதரானுர்.

## பாட வகுப்பு

ஆறுமுகம் தனது சூழலில் உள்ளவர்களுக்குச் சைவசமய உண்மைகளையும், செந்தமிழிலுள்ள செல்வத்தையும் விளக்குவான் வேண்டி, பாடவகுப்பு ஒன்றினை ஆரம்பிப்பதில் கவனத்தைச் செலுத்தினுர். இரவிலும் பகலிலும் நடாத்தப்பட்ட இந்தப் பாட வகுப்புக்கு அவரது வயதொத்த வாலிபர்களும் மற்றவர்களும் கல்வி கற்க வந்தார்கள். மிஷனரிமார்கள் எவ்வாறு தங்கள் மதத்தைப் போதித்துப் பரப்ப முயன்றூர்களோ, அதனைப் பின்பற்றி இவரும் சைவ சமயத்தைப் பரப்புவதற்குப் பல முயற்சிகள் எடுத்தார். மூன்ருண்டுக்குள் பல இளைஞர்கள் தமிழிலும் சமஸ்கிருதத்திலும் வல்லுநரானுர்கள்.

## வண்ணுர்பண்ணைச் சிவன்கோவில்

*1847*-ம் ஆண்டு மார்கழி மாதம் *31*-ம் நாள் வண்ணுர்பண்ணைச் சிவன் கோவில் மண்டபத்தில், பல சைவப் பெரியார்கள் கூடிய சபை முன்னிலையில், சைவப் பொலிவும் தவ வேடமும் ஒருங்கே மிளிரத் தோன்றி, அரியதொரு சமய விரிவுரை பொழிந்தார்; அருள்மழை பொழிந்தார் எனலாம். அவர் ஆற்றிய சொல் விருந்தையும், செந்தமிழின் சிறப்பையும், அதனுடைய நயத்தையும், கங்காநதியின் பெருக்கை நிகர்த்த பேச்சுத் திறனையும் செவிமடுத் தின்புற்றனர். இவருடைய இந்தச் சைவப் பிரசங்கம் ஆரம்பமான சுபவேளையில், ஆலய மணியும் நாதகீதம் எழும்பி, மலரப்போகும் புது எழுச்சியை வரவேற்பதுபோன்று கட்டியம் கூறிற்று. இந்த உபந்நியாசம் வாரா வாரம் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைதோறும் தவருது நிகழ்ந்து வந்தது.

## பாதிரியார் வாழாவிருத்தல்

சைவ சமயத்தவர்களுடைய வாழ்க்கையில் ஒருவித மாற்றத்தை, வெள்ளிக்கிழமைதோறும் நடக்கும் சமயப் பேச்சுக்கள், செய்வதனைக் கண்ட மிஷனரிமார்கள் மிகவும் பீதியடைந்தார்கள். பார்சிவல் பாதிரியாரிடம் சென்று முறையிட்டார்கள். ஆறுமுகம் சுயநலமற்ற சேவைகளைப் பாதிரியாருக்கு அல்லும் பகலும் புரிந்து வருகின்றவராகையினுல், மிஷனரிமார்கள் வந்து புகாரிட்டவைகளைக் கேட்டு வாழாவிருந்துவிட்டார்.

## வித்தியாசாலை ஆரம்பம்

அத்தியாவசியகமாக ஒரு பாடசாலை ஆரம்பிக்க வேண்டுமெனக் கண்டு, *1848*-ம் ஆண்டு ஒரு வித்தியாசாலையை ஆரம்பித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே ஆண்டு பார்சிவல் பாதிரியாரின்கீழ் பார்த்துவந்த உபாத்தித் தொழிலுக்கும் ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிட்டார். எதிர்பாராத இந்தச் சம்பவத்தைத் தாங்கமுடியாத பார்சிவல் பாதிரியார், யாழ்ப்பாணத்தைத் துறந்து சென்னபட்டினம் புக்கு, அங்கேயே தங்கித் தமிழைக் கற்றுப் பண்டிதரானார். நல்ல வருவாய் தரக் கூடிய உபாத்தித் தொழிலை விட்ட காரணத்தினால் அதிருப்தி அடைந்த ஆறுமுகத்தின் சகோதரர்களும் இவரை மிகவும் வன்மையாகக் கண்டித்தனர். அதனால் ஆறுமுகம் இனபந்துக்களை வேண்டாம் எனத் துறந்துவிட்டார்.

### ஓலைச்சுவடிகள்

ஆறுமுகம் படிக்குங்காலத்தில் நூல்கள் பல ஓலைச்சுவடிகளிலேயே இருந்தன. சாதாரண மக்கள் இச்சுவடிகளில் உள்ள எழுத்துக்களை இலகுவாகவும் பிழையறவும் கற்க முடியாத முறையில் இருந்தனர். ஆறுமுகப் பண்டிதர் இச்சுவடிகளைப் பொறுக்கிப் பிற்காலச் சந்ததியினரின் நன்மையைக் கருதி, அச்சுவாகனமேற்றத் துணிந்தார். அக்காலம் அமெரிக்க மிஷனரிமார்கள் தங்கள் நூல்களை அச்சிடுவித்தே உபகரித்தனர் சைவ நிந்தனை முதலாம் சிவதூஷணைகளை ஆயிரக்கணக்காகப் பதிப்பித்து மக்களிடை விநியோகித்தனர். இத் துண்டுப் பிரசுரங்கள் மக்களிடை பெரிய சூறுவளிக் குழப்பத்தை உண்டுபண்ணின. அதனால் ஆறுமுகம் கொதித்தெழுந்தார். மனம் நிம்மதியடையாது வெதும்பினார். ஆகவே அச்சுயந்திரம் பெறுவதற்காகச் சென்னபட்டினம் சென்றார்.

### திருவாவடுதுறை ஆதீனமும் "நாவலர்" பட்டமும்

சென்னை நோக்கிச் சென்ற ஆறுமுகம், சைவத்துக்கும், தமிழுக்கும் உறைவிடமாக விளங்கும் திருவாவடுதுறைக்கும் போக வாய்ப்புக் கிடைத்தது. ஆதீன மகா சந்நிதானம் ஆறுமுகத்தை நோக்கி, அங்கு கூடியிருந்த புலவர்கள் சபையில், ஓர் உரை நிகழ்த்துமாறு பணித்தது. ஆறுமுகத்தினுடைய பேருரையை, பேருவகையுடன் செவிமடுத்த மகா சந்நிதானம் அன்னாருடைய அறிவின் ஆழத்தையும், பேச்சின் திறனையும், குரலின் இனிமையையும், பொருளின் தெளிவையும் மெச்சி ஆறுமுகத்துக்குப் பல உபகாரங்கள் செய்து, 'நாவலர்' என்ற புகழ்வாய்ந்த பட்டத்தினையும் சூட்டியது. அன்றுதொட்டு ஆறுமுகம் என்ற பெயருக்குப் பதிலாக எல்லோரும் 'நாவலர்' என்றே பெருமையுடன் அழைக்கத் தொடங்கினார்கள்.

சனக மகாராஜனுடைய யாகத்தைக் கண்டுகளிக்கச் சென்ற ஸ்ரீ ராமபிரான் எவ்வாறு சீதாபிராட்டியைக் கைப்பிடித்தாரோ அவ்வாறு ஆறுமுகமும், அச்சுயந்திரம் பெறும்பொருட்டுச் சென்னைக்குச் சென்றவிடத்து, 'நாவலர்' என்ற கௌரவ கிரீடத்துடன் யாழ்ப்பாணம் வந்தடைந்தார்.



### நாவலர் புகழ்

தமிழ்நாடு முற்றும் நாவலருடைய பெயரும் புகழும் விரைவில் பரவத் தொடங்கியது. செந்தமிழுக்கும் சித்தாந்த அறிவுக்கும் ஓர் உதாரண புருடராக விளங்கினார். பல சைவ சமய நூல்களை எழுதி அச்சிட ஆரம்பித்தார். பாலர்களுக்கும் மற்றையோர்களுக்கும் உகந்த நூல்களை எழுதினார். மாணவர்களுக்கான இலக்கணச்சுருக்க நூல்களை எழுதினார். தமிழ் வளர்ச்சியின்பொருட்டு நாவலர் அரிய பெரிய தொண்டுகள் ஆற்றினார். தொன்மைவாய்ந்த எத்தனையோ அரிய நூல்களுக்கு விசேட பதவுரை, பொழிப்புரை தந்து மறு பதிப்புக்கள் வெளிவரச் செய்தார். இந்தியாவிலும் பிற இடங்களிலுமுள்ள பல கற்ற விற்பன்னர்கள், பழைய ஏடுகளைப் பரிசோதித்து அச்சிடுவதற்காக நாவலர் பெருமானை நோக்கித் தவமிருந்தனர். தென்னகத்தில் மிகவும் கீர்த்திவாய்ந்த மகாவித்வான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் நாவலர் பெருமானுடைய நட்பை மிகவும் விரும்பிப் பெற்றார்.

### கண்டனப் புலி

நாவலர் பெருமான் தமது உடல், பொருள், ஆவி அத்தனையையும் சமய விருத்தியின்பொருட்டுத் தியாகம் செய்தார். பாதிரிமார்களுடைய துர்ப் போதனைகளுக் கெதிராகவும், மக்களைக் கூறுபோடும் துண்டுப் பிரசுரங்களுக்கு மாறாகவும், நாவலர் பெருமான் ஆணித்தரமான வகையில் கண்டனப் பத்திரம் எழுதி, பாதிரிமார்களுடைய வாயை அடைத்தார். இதன்பலனாக, சைவசமயம் நீங்கிப் புறச்சமயம் போந்த பலர் மீண்டும் சைவம்புக்கு, நாவலர் பெருமானின் திருவடிகளில் வீழ்ந்து நமஸ்கரித்து, விபூதி பெற்றுய்ந்தார்கள். கைக்கூலி வாங்கி அன்றாட வாழ்க்கை நடத்தும் பாதிரிகளுடைய கையாட்கள் சிலர், நாவலர் பெருமானுக் கெதிராக நையாண்டி புரிந்தனர். பயம் என்றதை அறியாத நாவலர் பெருமான், மிஷனரிமார்கள் செய்யும் அடாத போதனைகளுக்கும் விஷமச் செய்கைகளுக்கும் எதிராகத் தனித்துநின்று போராடினார்.

### சிதம்பரம் : வித்தியாசாலை

தென் இந்தியாவின்கண் உள்ள சிதம்பரத்திலே நாவலர் பெருமான் ஒரு வித்தியாசாலையையும், ஓர் அச்சகத்தையும் தாபித்தார். இதேபோன்று யாழ்ப்பாணத்தில், பல இடங்களில் கல்விக் கூடங்கள் அமைத்துச் சகலகலாவல்லியின் கடாட்சம் பெருகச் செய்தார்.

### நூல்கள் வெளியிடுதல்

கிறிஸ்தவ குருமார்கள் தங்கள் கத்தோலிக்க மதத்தைப் போதிப்பதற்கும், பரப்புவதற்கும், எவ்வாறு சிறு பிரசுரங்களைப் பதிப்பித்தார்களோ, அவ்வாறு நாவலர் பெருமான், சைவ சித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாந்த சாரமாக விளங்கும் வேதம், ஆகமம், தேவாரம் திருவாசகம் ஆகியவைகளைப் பிழிந்து, சைவச் சிறுர்களுக்குச் சிறு நூல்கள் வடிவில் அச்சிடுவித்து உபகரித்தார். தென்னகத்துச் சைவப் பெரியார் ஸ்ரீலஸ்ரீ ஈசான சிவாசாரியார் அவர்கள், நாவலர் பெருமானுல் எழுதி வெளியிட்ட சைவவினுவிடை முதலாம், இரண்டாம் புத்தகங்களைக் கண்ணேபோற் போற்றுவதோ டமையாது, நாவலர் பெருமானைத் தமது ஞானகுருவாகவும் போற்றி வந்தார்.

### தமிழ் வசனநடை கைவந்த வள்ளல்

தமிழ் வசனநடைக்கு ஓர் உருவம் அமைத்து, தரிப்புக் குறியீடுகளைப் புகுத்தித் தமிழ் அன்னைக்குப் புது அணி செய்தார். மேடைப் பேச்சு, பிரசங்கம், உபந்நியாசம் என்ன என்பதே தெரியாத அக்காலத்தில், மக்களிடையே இவைகளுக்குத் தனிமதிப்புக் கொடுத்துச் சமய மழை பொழிந்தார். தமது அத்தியந்த மாணவர்களை, மக்களிடை சென்று, நற்பழக்கம், ஆலய வழிபாடு, புலாலுண்ணுமை, சேவை புரிதல் முதலாம் நற்பண்புகளைப் பற்றிப் பிரசங்கிக்குமாறு ஒழுங்குசெய்தார்.

### ஒப்புயர்வற்ற ஒழுக்க சீலர்

நாவலர் பெருமான் ஓர் உண்மையான, கட்டுப்பாடான பிரமச்சாரிய வாழ்க்கையைக் கைப்பிடித்து ஒழுகினவர். சிவபூசை செய்யாது அவர் உணவு கொண்டது கிடையாது.

கையில் ஒரு செம்புச் சல்லியுமில்லாத வேளையிற்ருன், ஏதாவது ஒரு முக்கிய காரியம் செய்ய ஏற்பாடு செய்திருப்பார். இந்த விதமான சந்தர்ப்பங்களில், இறைவனுடைய திருவடிகளைத் தியானித்தவண்ணம், பலமணித்தியாலம் ஊன், உறக்கமின்றித் தவமிருப்பார். அப்போது ஆண்டவனருளால் ஏதாவதொரு திசையிலிருந்து எவராவது ஓர் அன்பர் நாவலர் பெருமானுக்கு வேண்டிய பொருளைத் தந்து நிற்பார்கள்.

### பலியிடுதல்

சைவ சமய அறிவுக்கு வரம்பாக இருந்து வாழ்ந்த நாவலர் பெருமானுக்குச் சமய சார்பான கிரியைகளைப் பற்றிய ஆழ்ந்த அறிவு இருந்தமையினுல் அரைகுறை அறிவுள்ள பிராமணர்கள் இவரைக் கண்டஞ்சுவார்கள்.

தென் இந்தியாவில், ஒருமுறை ஒரு யாகத் தொடக்கத்துக்கு மிருகபலி செய்ய இருந்த செயலைத் தடுத்து நிறுத்தினர். சிதம்பரத்திலே உள்ள பிராமணர்கள், ஒரே குரலில் வேதங்களில்லை என மறுத்து வாதாடிடும் அறிவிலிகளைப் போன்று, நாவலரும், வேதத்தில் கூறிய பிரகாரம் பலிசெய்வதனைத் தடுப்பதற்கு இவருக்கு என்ன அதிகாரம் உண்டு எனக் கடாவினுர்கள்.



"சாத்திர முறைப்படி யாகம் செய்வதற்கு ஓர் அருகதையுமற்ற பிராமணர்களாகிய உங்களுக்கு என்ன யோக்கியம் உண்டு?" என மறு உத்தரமாகக் கூறி அவர்களுடைய வாதத்திற்கு முற்றுப் புள்ளி வைத்தார். பலியிடுதலும் நின்றுவிட்டது.

### அரசியல்வாதி

நாவலர் பெருமான் மக்களின் நலன்பொருட்டு, நாளாந்த வாழ்வில் வரும் இன்னல்களைத் துடைக்கத் தன்னுலான கடமைகளைத் திறம்படப் புரிந்தார். கோவில்களின் நிர்வாகத்தில், மிகவும் கடுமையான கண்காணிப்பாளராக இருந்தார். மகாத்மா காந்தியைப்போன்று சாதாரண மக்களுடன் சகசமாகப் பழகினர். பஞ்சம், பிணி தோன்றியக்கால் அரசாங்கத்துடன் வாதாடி, நோயினுல் அவதியுற்றவர்களுக்குப் பலவித உதவிகளைப் பெற்றுத் தந்தார். ஒருமுறை அரசாங்க அதிபருக் கெதிராக, அன்னுருடைய அநீதிகள் நிறைந்த நிர்வாகக் கொடுமைகளைப் பற்றி ஒரு மகஜர் மூலம் எடுத்துவிளக்கி, சீமையிலுள்ள குடியேற்ற நாட்டுக் காரிய தரிசிக்கு முறையிட்டார். இலங்கை சட்டமன்றத்தில் சேர் பொன். இராமநாதன்துரை அவர்கள் நாவலர் பெருமானைக் குறித்து "இந்துக்களின் சீர்திருத்தச் செம்மல்" என விதந்து உரை நிகழ்த்தியுள்ளார்.

### இறைவன் திருவடி

1879-ம் ஆண்டு, மார்கழித் திங்கள் 5-ம் நாள் நம் நாவலர் பெருமான் இறைவனுடைய குஞ்சிதபாத நிழலை அடைந்தார். பல நிலைப்பட்ட மக்கள் ஒன்றுசேரவும், தேவார, திருவாசகம் ஓதவும், பெருமானின் பூதவுடலுக்குச் செய்யவேண்டிய கடன்களை முடித்துப் பின் அலங்கரிக்கப்பட்ட அழகான இரதத்தின்மீது வைத்து, மயானத்தில் சந்தனக் கட்டைகள் கொண்டு தீ மூட்டிச் சைவ மக்கள் இறுதி அஞ்சலி செலுத்தினர்கள்.

பல கோடி மக்கள், இவ் ஈழநாட்டிலும் அண்மை நாடுகளிலும் நாவலர் பெருமான் தன்னலமில்லாது ஆற்றிய பல்வேறு தொண்டுகளை எண்ணி எண்ணி நினைவுகூருகின்றுர்கள்.

சைவமும் செந்தமிழும் நாவலர் வழி வாழ்க!

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெற்றிமணி விற்பனையாளர்

யாழ்ப்பாணம் : அன்பு புத்தகசாலை, 27D, பெரியகடை. யாழ்ப்பாணம்.

பதுளை : மீனும்பிகை நியூஸ் ஏஜன்சீஸ், 272, லோவர் ஸ்றீற், பதுளை.

பொத்துவில் : எம். எல். ஜலால்தீன், ''அருளகம்'', பொத்துவில்.

கல்முனை : செல்வி நோ. இராசம்மா, இராமகிருஷ்ண வீதி, கல்முனை.

கிண்ணியா : திருமதி அருளானந்தன், பாரதி வீதி, ஆலங்கேணி, கிண்ணியா.

கல்கின்ன : எச். எம். லாபீர், 405, பள்ளி வீதி, கல்கின்ன, கண்டி.

மூதூர் : அ. அரசரெத்தினம், சேனையூர் 6, மூதூர்.

புத்தளம் , க. கௌரிநாதன், இந்து இளைஞர் மன்றம். அநுரதபுர வீதி, புத்தளம்.

வெற்றிமணிப் பிரதிகளுக்கும், விளம்பர விபரங்களுக்கும் இவர்களுடன் தொடர்புகொள்ளவும்.

வெற்றிமணிக்குரிய பணம் அனுப்பவேண்டிய முகவரி :

பொ. இராசரத்தினம்,

சக்தி அச்சகம், 253 1/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


## படப்போட்டி விடை

1\. குடை 2. பெரியவர் 3. சிறுவன் 4. சிறுமி
5\. நாய் 6. எருமை 7. குருவி 8. மழை 9. வெள்ளம்


மேலேயுள்ள விடைகளுக்குப் பொருத்தமான வேறு சொற்களை எழுதினாலும் பிழையல்ல.

சரியான விடையனுப்பியவர்களுள் முதலாவதாக எடுக்கப்பட்ட சரியானவிடையை அனுப்பியவர் :

ஆ. பூங்குன்றனார், ''பழமுதிர்சோலை'', முள்ளியவளை. 10 ரூபா பரிசு பெறுகின்றார். பங்குபற்றிய நேயர்களுக்கு நன்றி.

—ஆசிரியர்






## ஜிம்மி

க. ஜெயசீலன், குரும்பசிட்டி.

அந்தப் பேராறு சலசலத்த வண்ணம் ஓடிக்கொண்டிருந்தது. அழகாகக் காட்சியளித்த அந்த ஆறு தன்னகத்தே ஆபத்துக்கள் பலவற்றையுங் கொண்டுள்ளது. நீர்ச்சுழல்கள் பல தங்கள் பசியைத் தீர்க்கும் தருணத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்தன.

ஆற்றங்கரையின் மணற்பரப்பு பரந்து கிடந்தது. அந்த மணற்பரப்பில் பந்தடித்துக் கொண்டிருப்பவர் யார்? சந்தேகமில்லை. இராமன்தான் பந்தடித்துக்கொண்டிருந்தான். அவன் அடிக்கும் பந்தை தன் வாயாற் கௌவி எடுத்து வரும் அவனது அருமையான நாயான ஜிம்மியை இன்று காணவில்லை.

அதோ தூரத்தில் தன் நண்பன் இராமனை நோக்கி ஓடி வருவது ஜிம்மியேதான். அது அவனிடம் வந்து சேருமுன் காற்றிலே கலந்த ஓர் அலறல் குரல் அதை நிலைகுலைய வைக்கிறது. அந்தக் குரலுக்குச் சொந்தமானவன் இராமனேதான். இராமன் ஆற்றிலே தத்தளித்துக் கொண்டிருந்தான். ஆற்றின் ஓட்டம் அவனை இழுக்க முயன்றது. அவன் கரையேற முயன்று தவித்துக் கொண்ருந்தான். ஆழமான அந்த ஆற்றிலே அமிழுமுன் கையிலகப்பட்ட மரக்கட்டை ஒன்றை அவன் பிடித்துக் கொள்கிறான்.

ஓடிவந்த ஜிம்மி சற்றும் தாமதியாது நீரில் இறங்குகிறது. இராமனை நோக்கி நீந்திச் சென்ற ஜிம்மி அவன் சட்டையைக் கௌவிய வண்ணம் கரைநோக்கி வந்தது. இராமன் கரையிலே நினைவற்றுக் கிடந்தான். ஜிம்மி வீடு நோக்கித் தலைதெறிக்க ஓடியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்றுநேரத்தில் இராமனின் தகப்பனும் வேறு சிலரும் ஆற்றங்கரைக்கு ஓடிவந்தனர். ஜிம்மி அவர்களை அழைத்துக் கொண்டு முன்னால் வந்து கொண்டிருந்தது. இராமன் மயங்கிய நிலையில் கரையிலே கிடந்தான். அவனைத் தூக்கி வீட்டுக்குக் கொண்டு சென்றனர். ஆற்றிலே பந்து மிதந்து கொண்டு சென்றது. அதைகண்ட ஜிம்மி திரும்பியது. அதற்கு இராமனைப்போல அதுவும் ஒரு நண்பன் தானே. அடுத்த நிமிடம் ஆற்றில் பாய்ந்து பந்தை நோக்கி நீந்த ஆரம்பித்தது.

படுக்கையிலிருந்த இராமன் எழும்பினான். நிகழ்ந்த சம்பவங்கள் அவன் மனதில் திரையிட்டன. பந்து விளையாடிக் கொண்டிருந்த போது பந்து ஆற்றினுள் விழுந்தது. அந்த ஆற்றைப்பற்றி யறியாத இராமன் ஆற்றில் குதித்தான். குதித்தபின் தான் ஆற்றின் ஆழம் விளங்கியது. அவன் நீரிலே தத்தளித்துக் கொண்டிருந்தான். அப்போது அவன் கண்ணில் ஜிம்மி தென்பட்டது. அது ஆற்றில் குதித்து அவனை நோக்கி நீந்தியது. அவ்வளவுதான் அவனுக்குத் தெரியும். அவன் மூர்ச்சையாகி விட்டான்.

நடந்த சம்பவங்களை நினைத்த இராமனுக்கு ஜிம்மியைப் பற்றிய நினைவு வந்தது. ஜிம்மி எங்கே அதைக் காணவில்லையே. அவன் தன் தந்தையிடம் ஜிம்மியைப் பற்றிக் கேட்டான். ''ஜிம்மிதான் உன்னை ஆற்றங்கரைக்குக் கூட்டிச் செல்கிறது. இன்று வரட்டும் நல்ல பாடம் கற்பிக்க வேண்டும்'' என்ற தகப்பனாரின் பேச்சைக் கேட்ட அவனுக்குக் கோபம் வந்தது. உடனே ஜிம்மியைத் தேடினான். அதைக் காணாததால் ஆற்றங்கரை நோக்கி ஓடினான். கரையிலே நின்றபடி ஜிம்மியைத் தேடியவன் ஆற்றின் நடுவே தெரிந்த உருவத்தை உற்றுப்பார்த்தான். சந்தேகமில்லை. அது ஜிம்மியேதான். அவனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அந்தப் பஞ்சு நெஞ்சில் தன்னைக் காப்பாற்றிய ஜிம்மியின் உருவம் உயர்ந்து தோன்றியது. ஜிம்மி அவனை நோக்கிக் குரைத்தது. ஆற்றில் குதிக்க வேண்டாம் என அது எச்சரித்திருக்க வேண்டும். ஆனால் அவனுக்கோ தன்னைக் காப்பாற்றும்படி அது கதறுவதாகவே தோன்றியது. அடுத்த நிமிடம் அவன்ஆற்றிலே



பாய்ந்தான். அதன்பின்தான் தான் செய்தது தவறு என்று அவனுக்குப் புரிந்தது. அவன் செய்த தவறை ஜிம்மியும் புரிந்து கொண்டது. இராமனைக் காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணம் அதன் மனதில் எழுந்ததும் அதன் உடலெங்கும் புதுவேகம் பரவியது. தன் சக்தி முழுவதையும் திரட்டி அவனை நோக்கி நீந்தியது. இராமனின் உடல் நீரினடிக்குச் சென்று பின் மேலே வந்தது. அவன் அலறினான். ஜிம்மி அவனை நோக்கி முன்னேறியது. இராமன் மீண்டும் ஒருமுறை கீழே ஆழ்ந்து பின் மேலே வந்தான். ஜிம்மி ஆற்றுடன் போராடியது. இராமனுடல் மீண்டும் நீரின் அடிமட்டத்துக்குச் சென்றது. சற்று நேரத்தில் அவனுடல் நீரில் மிதந்தது. ஜிம்மி ஆவலுடன் நீந்தியவண்ணம் அவனருகே வந்து. அவனது சட்டையைக் கௌவிய வண்ணம் கரைக்கு வந்தது. கரையில் அவனை விட்டு விட்டு வீடு நோக்கி ஓடியது. இராமனின் தகப்பனாரை அழைத்த வண்ணம் ஜிம்மி ஆற்றங்கரைக்கு வந்தது. இராமனின் உடலைப் புரட்டிய தகப்பனார் செயலற்று நின்றார். அடுத்த கணம்அங்கு கூடிய இராமனின் உறவினர் அரற்றினர்.

ஜிம்மியைத் தேடிச் சென்றான் இராமன். அவன்தேடிய ஜிம்மியோ அவனது பிணத்தைக் காத்த வண்ணம் அங்கே நின்றிருந்தது.

* *

உருவகக் கதை:

# ஏமாற்றம்

செல்வி அ. பரமேஸ்வரி, காரைதீவு, கி. மா.

அன்று ஓர் மதிய நேரம்; சாப்பிட்டு மிஞ்சிய உணவை இலையுடன் கொண்டு ஒரு நாயின் முன்பாக வைக்கிறார் ஒருமனிதர். அந்த நாய் அதைச் சாப்பிடுவதற்காக உணவு இலையின் அருகே வந்தது. இந்த நாய் அருகில் வருவதைக் கண்ட, மரத்தின் மேலிருந்த காக்கையொன்று, தனக்கு இதில் பங்கு கிடைக்காதே? எனப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தது. இதனிடையில் வேறு வழியால் வந்த இன்னுமொரு நாய், அந்த உணவு தனக்குத்தான் என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணத்துடன் அந்த இலையின் அருகே வந்தது. இதைக் கண்ட முதல் நாய்க்குத் தன் குலத்தின் குணம் வெளிப் பட்டு விட்டது. எனவே இரண்டும் ஒன்றையொன்று வென்று அந்த உணவைக் கைப்பற்றுவதற்காக வாக்கு வாதம் செய்து கொண்டிந்தன.

முதலாம் நாய் கூறியது: ''எனக்கு வைத்த உணவைப் பங்குபற்ற வந்த நீயார்?'' என்று. அதற்கு மற்றையது, ''நானும் உன் இனத்தைச் சேர்ந்தவன்தான்,'' ''எனக்கும் அதில் அரைவாசியைத் தா'' என்றது. ஆனால் முதல் நாயோ விட்டபாடில்லை. ''எனக்குக் கிடைத்த உணவை நான் ஏன் உனக்குத் தரவேண்டும், எனக்குக் கிடைத்ததை நான் விடப்போவதில்லை. எனவே நீ வேறிடத்தில் போய்த்தேடிக் கொள்'' என்றது. அதற்கு மற்றையது, ''உனக்கு ஏன் இவ்வளவு ஈயாத்தனமும் பொறாமையும் . . நாம் ஒரேஇனம் ஒரேகுலம், நமக்குள் ஒற்றுமையில்லையா? ''இன்று எத்தனையோ வீடுகளில் அலைந்துதிரிந்து கடைசியில் தான் இவ்விடம் வந்து சேர்ந்தேன், எனவே நாம் இருவரும் இதைப் பகிர்ந்து சாப்பிடுவோம் எனக்கும் பசியாயிருக்கிறது'' என்று துக்கமாகக் கூறியது.

இதைக்கேட்ட முதல் நாய்க்குக் கோபம் வந்ததும், அதன் மேல் பாய்ந்தது. இரண்டிற்குமிடையில் பெரும் போராட்டம் நடக்க ஒன்றையொன்று கடித்துக் குதறிக் கொண்டிருந்தன. இப்போராட்டத்தின் நடுவே, மரத்திலிருந்து சமயம் பார்த்துக் கொண்டிருந்த காகம், உணவு இலையின் அருகே வந்தமர்ந்து கொண்டு கா! கா! என்று அங்குமிங்கும் பார்த்துப் பார்த்துக் கரைந்தது. அடுத்த விநாடி...... ஓராயிரம் காக்கைகள் அவ்விடத்தில் வந்து கூடியன. உடனே எல்லாக் காக்கைகளும் அந்த உணவிலையைக் காலியாக்கிக் கொண்டிருந்தன.

இதன்பிறகு, போராட்டத்தை விட்ட முதலாம் நாய் இரண்டாம் நாய்க்கு முதல் ஓடிவந்தது, உணவு இலையை நோக்கி. நாய் உணவிலையை அடைவதற்கும் காக்கைகள் அந்த உணவைக் காலியாக்கிவிட்டுப் பறப்பதற்கும் சரியாயிருந்தது. காலியாயிருந்த உணவிலையைக் கண்ட நாய், ஏமாற்றத்தோடு காக்கைகளையே வெறித்துப் பாரத்துக்கொண்டிருந்தது.



<u>நாடகம்</u>

# மனம் நிறைந்த பொங்கல்!

—சௌமினி—

நேரம்: மாலை.

பாத்திரங்கள்: ராம், ராமின் அம்மா, அப்பா, தங்கை.

(பாடசாலையிலிருந்து அவசரமாக ஓடி வருகிறான் ராம்)

ராம்: அம்மா! அப்பா வந்துவிட்டாரா?

அம்மா இல்லையே, எதற்காக இவ்வளவு அவசரம்.?

ராம்: என்னம்மா (சிணுங்கலுடன்) வெடியளெல்லாம் வாங்கித் தாறனெண்டு சொல்லியே ஒரு கிழமையாச்சு. இன்னும் வாங்கேல்லை. ரண்டு நாள் தானே இருக்கு அம்மா பொங்கலுக்கு.

அம்மா: ஆரம்பித்து விட்டாயா உன் தொண தொணப்பை. கடன் வாங்கியாவது வெடி வாங்கித் தருகிறேன் என்று தானே சொன்னார்.

ராம்: சொல்லிறது தான். நடந்தால் தானே......

அம்மா: இதோ பார் முணுமுணுக்காதே. அவர் கஷ்டப்பட்டு கடன் வாங்கித்தர நீங்கள் நிமிஷத்தில் வெடித்துக் கரியாக்குவது. பிறகு அப்பா கடனை அடைக்க எவ்வளவு கஷ்டப்படுவார் என்பதை நீங்கள் உணர்ந்தால் காசை வெடியாக்கி வெடியைக் கரியாக்க உங்களுக்கு மனம் வருமா?

ராம்: இந்தமுறை பொங்கலுக்கு கடன் வாங்காமல் சமாளிக்கலாம் என்று அன்றைக்கு நீங்கள் கதைத்தபடியால்தான் வெடிகேட்டேன். இல்லாவிட்டால்......

அம்மா: புது உடுப்புகள், வெடிவகைகள் என்று வாங்காவிட்டால் தான், மற்றப் பொங்கல் செலவுகளுக்கு கடன் வாங்காமல் சரிக்கட்டலாம் என்று கதைத்தோம். இவைகள் வாங்குவதாயிருந்தால் கடன் வாங்காமல் முடியாது. அப்பா மட்டும் பெரிய பதவியிலிருந்தால், நிறைய சம்பாதித்தால் ஆசையாக உங்களுக்கு வாங்கித் தருவார். இப்ப ஆசையிருந்தும் வசதி இல்லை. அப்படியெண்டாலும் உங்கள் தொல்லைக்காக கடன்வாங்கி அவைகளைத் தந்தாலும் உண்மையான சந்தோஷத்தோடு தரமுடியுமா? இந்தக் கடனை எப்படி அடைக்கப் போகிறேனோ என்ற கவலையோடுதான் தருவார். உங்களுக்கும் வெடிவெடிக்கும் போதும் சட்டை போடும்போதும் உண்மையான சந்தோஷம் இராது. அப்பாவின் சொந்தப் பணமாக இருந்தால் உங்களுக்கும் சந்தோஷம்; அப்பாவுக்கும் சந்தோஷம். இம்மாதிரி டாம்பீகச் செலவெல்லாம் பணக்காரருக்குத்தான் சரி. எங்களை வெறுமனே பொங்க விட்டாலே போதும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராம்: அது சரிதான் அம்மா. மோகனுக்கு அவனுடைய அப்பா இருபத்தைந்து ரூபாவுக்கு விதம் விதமாய் வெடியெல்லாம் வாங்கிக் கொடுத்தார் அம்மா.

அம்மா: அவர் பெரிய உத்தியோகம் பார்க்கிறார். வசதி இருக்கு வாங்கிக்குடுக்கிறார். மாதக் கடைசியில் காசு காணாமல் வந்தாலாவது அந்த வெடியைக் கொஞ்சம் குறைத்து வாங்கியிருக்கலாமே என்று தோன்றும். ஆனால், அந்த மாதிரிச் சந்தர்ப்பம் அவர்களுக்கு வராது. நாங்கள் அவர்களை நினைக்கக்கூடாது. எங்களைவிட மோசமாய்ப் பொங்கலன்று ஒருபிடி சோறுகூட இல்லாமல் தவிக்கிறவர்களை நினைத்துப் பார்த்து, நாங்கள் எவ்வளவோ மேல் என்று நினைக்க வேண்டும்.

ராம்: அம்மா! இந்த முறை எனக்கு வெடியும், புதுச் சட்டையும் வேண்டாம். பொங்கலன்று சாமி கும்பிடும்போது, இன்னும் சிறப்பாகக் கொண்டாடத்தக்கதாய் அப்பாவின் சம்பளத்தைக் கூட்டிவிடு என்று கும்பிடுவேன் அம்மா.

அம்மா: என் அருமை ராம்! நீ நல்ல பிள்ளை. சொல்கேட்டு நடக்கிறாய். பெற்றவர் நிலை அறிந்து அவர்கள் மனம் நோகாமல் நடக்கிறாய். கடவுள் அடுத்தமுறை உனக்கு எல்லாம் தருவார். ஆனால் சசியை ஒன்றும் செய்யேலாது போல இருக்கு. அவள் சொல் கேட்கிறாளில்லை. வெடி இல்லாவிட்டாலும் சட்டை வேணுமென்று காலமை முழுதும் அழுதாள். அவளுக்கு எங்கள் நிலமை விளங்குதில்லை.

ராம்: நீங்கள் கவலைப்படவேண்டாம் அம்மா. நான் சொல்லுற மாதிரிச் சொல்லி விளங்கப்பண்ணிறன். கடன் வாங்கிப் பெரிதாய்க் கொண்டாடுறதைவிட கடனில்லாமல் சுருக்கமாய்ப் பொங்கல் கொண்டாடிறது சந்தோஷம் என்று விளக்குவேன் அம்மா.

அம்மா: நீ நல்ல பிள்ளை. சொல்லிப் பார். ஆனால் அவள் இன்னும் பள்ளிக்கூடத்தாலை வரேல்லைப்போலை! போய்ப்பார்.

[ராம் சசியைத் தேடிக்கொண்டு வெளியே போகின்றான். பாதி வழியில் பாதையில் தனக்குமுன் கொஞ்ச தூரத்தில் அவள் வந்துகொண்டிருப்பதைப் பார்த்ததும் நின்று சிறிது யோசித்தான். பிறகு மெதுவாக மண்ணில் ஒருபத்துச் சதத்தை நழுவ விடுகிறான். சசி அருகில் வந்ததும்]

ராம்: என்ன சசி! ஏன் இத்தனை நேரம்? அடடே இங்கே பார் ஒரு பத்துச் சதம் மண்ணிலை விழுந்து கிடக்கு.

சசி: எங்கே அண்ணா? பள்ளிக்கூடத்தில் என்றால் ரீச்சரிடம் கொடுக்கலாம். இப்ப இதை என்ன செய்யிறது?

ராம்: என்ன செய்யலாம்? நீயே சொல்லு!



சசி: ரொபி வாங்குவோமா அண்ணா ரண்டு பேருக்கும்.

ராம்: ஏன் வேறு ஏதாவது உபயோகமானதாய் வாங்குவோமே?

சசி: வேறு என்ன வாங்குவது? கொப்பி பென்சில் வாங்குவதாயிருந்தால் இன்னும் காசு வேணும். அதுக்கு அப்பா தருவார். ரொபி வாங்கக் கேட்டால் காசில்லை என்பார். இப்பிடி வேறையாய்க் காசு கிடைத்தபோதாவது வாங்குவோமே. மோகன் ஒவ்வொரு நாளும் நிறைய ரொபியும் பிஸ்கட்டும் வாங்கித் தின்னுவான்.

ராம்: அவனுடைய அப்பா நிறையச் சம்பாதிக்கிறார். வாங்கிக் குடுக்கிறார். சரி அதிருக்கட்டும். இந்தக் காசு அப்பா தந்ததாக இல்லாமல் வேறே காசாய்க் கிடைத்தபடியால் ரொபி வாங்க மனம் வருது. இதுவே அப்பா பென்சில் வாங்கத் தந்த காசாக இருந்தால் வாங்குவோமா! அப்படி ஆசையில் வாங்கி வாயில் போட்டாலும் "ஐயோ இனிப் பென்சிலுக்கு என்ன செய்ய? அநியாயமாய் இனிப்பு வாங்கி விட்டோமே" என்று நினைக்கிறதிலே இனிப்புக் தின்னிறதும் தெரியாது. என்ன சசி அப்படித் தானே?

சசி; ஓமண்ணா, வாயில் இனிப்பு இருந்தாலும் கவலையிலும், பயத்திலும் இனிக்கமாட்டுது.

ராம்: அப்ப இதுபோலைத்தான் நாங்கள் பொங்கல் கொண்டாடிறதும். எங்களுக்கு வெடியும், புதுச்சட்டையும் வாங்க அப்பாவிடம் காசு காணாது. அதாலை அவர் தன்னுடைய சொந்த உழைப்பிலே இல்லாமல் கடன் வாங்கித்தான் அவைகளை வாங்கித் தரவேண்டும். அப்போ அவருக்கும் சந்தோசமிராது. எங்களுக்கும் சந்தோசமிராது. அதாவது பென்சில் வாங்கிற காசிலை இனிப்பு வாங்கிச் சாப்பிட்டால் எப்படி இருக்குமோ, என்ன நினைப்பமோ அதுபோலைத் தான் வெடி சுடும்போதும் கடனுக்கு வாங்கிக் கரியாக்கிறோமே என்று நினைப்போமே தவிர சந்தோசமிராது.

சசி: அப்ப இப்ப வேறையாய் இந்தக் காசு கிடைத்ததாலை ரொபி வாங்க நினைத்தோம். அதுபோல் வேறு காசு அப்பாவுக்குக் கிடைத்தால்.......

ராம்; மோகனின் அப்பாவிற்கு அப்படித்தான். மாதச் செலவுக்கு வேண்டிய காசைவிட அதிகம் அவருக்குச் சம்பளமாகக் கிடைப்பதாலும், அவன் ஒரே பிள்ளையாக இருப்பதாலும் அவனுக்கு எல்லாம் கிடைக்கிறது. இப்பிடிச் செலவழித்தாலும் மாதக் கடைசியில் திண்டாட்டம் இருக்காது. எங்களுக்கு அப்படியில்லையே. நாங்கள் அதை உணராமல் எங்க அப்பா ஒன்றும் வாங்கித் தரவில்லை என்று குறை சொல்லலாமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சசி: அண்ணு! நான் இதை ஒன்றும் உணராமல் காலமை அம்மாவிடம் அப்பாவைப்பற்றிக் குறை சொல்லிச் சண்டை போட்டேன். அது பிழையென்று இப்பதான் தெரியுது!

ராம்: நாங்கள் செய்த பிழையை, மனமார நாமே நினைத்துக் கொண்டால் போதுமே. சசி நாங்கள் இனிமேல் மற்றவைக்கு எல்லாம் கிடைக்குது எங்களுக்கு இல்லையே என்று பொருமைப்படாமல், வீணுக அம்மா - அப்பாவைக் குறை சொல்லாமல் இருப்போம். தினமும் கடவுளை வணங்கும் போது அப்பாவுக்குப் பதவி உயர்ந்து சம்பளம் கூடவேண்டும் என வேண்டிக்கொள்வோம். என்ன சசி! நான் சொல்வது சரிதானே.

சசி: அதுதான் சரி அண்ணு! அப்படி நாங்கள் கும்பிட்டால் அடுத்த பொங்கலைச் சிறப்பாகக் கொண்டாடப் பண்ணுவார் கடவுள். அடடே அண்ணு நேரம் போட்டுதே. அப்பா வந்து கடைக்குப் போயிருப்பாரோ தெரியேல்லை. கெதியாய் ஓடிப்போய் வெடி, சட்டை ஒன்றும் வாங்க வேண்டாம் என்று சொல்லுவோம்.

[இருவரும் ஓடுகிருர்கள். வீட்டில் அப்பா அம்மாவிடம் கேட்டுக் கொண்டிருக்கிருர்]

அப்பா: எங்கே ராமும், சசியும்? பாவம் எத்தனை நாள் கேட்டுக் கொண்டிருந்தார்கள். கையில் காசு இல்லாததால் ஒன்றும் வாங்கிக் குடுக்கேல்லை. இப்ப ஒருவர் காசு தாறன் என்று சொன்னவர் போய் வாங்கிக்கொண்டு சசிக்கு ஒரு சட்டையும், ராமுக்குக் கொஞ்சம் வெடியும் வாங்கிக்கொடுக்க வேண்டும்.

சசி: அப்பா! அப்பா! எங்களுக்கு எதுவும் வேண்டியதில்லை. எல்லாம் அடுத்த முறை உங்களுக்குப் பதவி உயர்ந்ததும் வாங்கிக் கொடுங்கள். இந்த முறை அதுகளில்லாமல் பொங்குவோமே!

அப்பா: (திகைப்புடன்) என்ன இது பாட்டி கதை, எப்போது தொடக்கம் என் பிள்ளைகள் இவ்வளவு தங்கக் கட்டிகளாக மாறினுர்கள்?

அம்மா: அவர்கள் ஒன்றும் மாறவில்லை. எப்பவும் இப்படித்தான் இருந்தார்கள். உங்களுக்குத் தெரிந்தால்தானே! அதிலும் மூத்தவன் தங்கக்கட்டியாக இருந்தால் மற்றவர்களும் அப்படித்தானே இருப்பார்கள்.

[ராமைப் பெருமையாகப் பார்க்கிருள் அம்மா]

ராம்: சரி; சரி அம்மா, கோப்பி எங்கே? தங்கக் கட்டிகள் என்ருல் கோப்பி தேவையில்லை என்று நினைத்தீர்களோ?

[எல்லோரும் மனம் நிறைந்து கலகலவென்று பொங்கிச் சிரிக்கிருர்கள்.]



# இலக்கியம் என்ருல் என்ன?

செல்வி செளபாக்கியவதி கந்தையா, மாரீசன்கூடல்:

அன்று தொட்டு இற்றைவரை மக்களின் வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒரு சாதனமாக விளங்குவது இலக்கியம். இலக்கியம் என்ருல் என்ன? இக் கேள்விக்கு ஒரொருகால் விடைகாண முயலுவோமாயின் அதன் சிறப்பு விளங்கும். இலக்கியம் என்பது வாழ்க்கை நலத்துக்கு இன்றியமையாததோர் கருவியாகும். நாகரீகத்துக்கும், பண்பாட்டுக்கும், அரசியல் துறைக்கும், ஆக்க வேலைகளுக்கும் என்றும் வழிகாட்டியாக விளங்குவது இலக்கியமாகும்.

இலக்கியம் என்ருல் என்ன? மனிதனது சாதாரண வாழ்க்கையை ஒட்டியதாகவும், அவனது வாழ்க்கைக்கு இன்றியமையாத சாதனங்களைப் படம் பிடித்துக் காட்டி அவனை நல்வழியில் நடத்தக்கூடியதாகவும் விளங்குவது தான் இலக்கியம். இத்தகைய இலக்கியங்களை ஆக்கித் தருபவன் புலவனே. அவன் அவ்வக் காலத்துக்கு ஏற்றவகையிலும், மக்களைப் பண்பாடுடையவர்களாக ஆக்கும் வகையிலும் இலக்கியத்தைச் சமைத்துவிடுகிருன். அதைப் படித்துச் சுவைத்த மனிதன் தன்னுடைய இலக்கிய அறிவினுல் தான் கண்ட உண்மைப் பொருளின் உயர்ச்சியைப்பற்றி எண்ணுவான். நாளடைவில் அவன் தன்னுடைய அறிவாற்றலினுல் சமூகத்துக்கும், சமுதாயத்துக்கும் ஏற்ற ஒரு மனிதனுகத் தன்னை மாற்றி அமைத்துக் கொள்கின்ருன். எனவே மக்களைத் திருத்தவும், மகிழ்விக்கவும் வல்ல சாதனங்களிலொன்ருக இலக்கியம் விளங்குகின்றது.

இலக்கியம் மக்களை மகிழ்விக்கவல்லதோர் சாதனம். அத்துடன் அது அவர்களைப் பலவழிகளிலும் திருத்திக்கொள்கிறது. எனவே இலக்கியம் என்ற கற்பகதரு மனித வாழ்க்கைக்கு என்றுமே துணைபுரிகின்றது. மக்களின் வாழ்க்கையையெல்லாம் அப்படியே படம்பிடித்துக் காட்டுகின்றது. அது மக்களின் வாழ்க்கையின் அடிப்படையிலேயே இயங்குகின்றது. இதனுலன்ருே இலக்கியம் வாழ்க்கை நலத்திற்கே உரியதென்று பல புலவர்களாலன்றி பாமர மக்களாலும் கூட உணரப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களின் வாழ்க்கையை ஆதாரமாகக் கொண்டே சங்க காலம் தொடக்கம் இற்றைவரை பல இலக்கியங்கள் தோன்றியுள்ளன. அவற்றின் சிறப்பினைச் சிறிதுதான் ஆராய்ந்து பார்ப்பினும் அது மக்கள் வாழ்க்கைக்கு உறுதுணை புரிவதைக் காணலாம். அந்நிய ஆட்சியின் கீழ் அடிமைப்பட்டிருந்த சமுதாயத்தை நோக்கிய பாரதியார், ''நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்'' என்றும், ''நிமிர்ந்த நன்னடையும் நேர்கொண்ட பார்வையும் நிலத்தில் யார்க்கும் அஞ்சாத தன்மையும் வேண்டும்'' என்றும் தனது பாரதி பாடலில் முழங்குகின்றார். அன்று அந்த நோக்கத்திற்காக எழுந்த இலக்கியம் இன்றுவரையில் ஓரளவாயினும் தன் நோக்கத்தை நிறைவேற்றிவிட்டதென்றே கூறலாம்.

நாகரீகத்திலும், பண்பாட்டிலும், அரசியற்றுறையிலும், ஆக்க வேலைகளிலும் ஊக்கமுடன் பணிபுரிந்து வருகிறது இன்றைய சமுதாயம். இச் சமுதாயத்தை இலக்கியக் கண்கொண்டு நோக்கினால் அதன் சிறப்புப் பொலிவாகும். இதனாலன்றோ இந்த இருபதாம் நூற்றாண்டிலே தோன்றிய புலவர்கள் சமுதாயத்துக்கேற்றவகையில் பேச்சுவழக்குடன் கூடிய தமிழில் இலக்கணவரம்பின்றி, இலக்கியச் சுவையுடன் கற்றோரும் மற்றோரும் அதைப் படித்து மகிழவேண்டும்; அதனால் தங்களது வாழ்க்கையைத் திருத்தியமைக்க வேண்டும் என்ற நோக்குடன் எழுதியுள்ளனர். இவ்வித நூல்களை இலக்கியக் கண்கொண்டு நோக்கும்போது மக்களை மகிழ்விக்கவும், திருத்தவும் வல்ல வாழ்க்கை நலத்திற்கேற்ற ஒரு கருவியாக விளங்குவதைக் காணலாம்.

இத்தகைய சிறப்புப் பொருந்திய இலக்கியங்களைப் படிக்கையில் அவ் விலக்கியங்களைப்பற்றிய இரசனையும் பொருட்களும் மனதில் ஒருவித கிளர்ச்சியை உருவாக்குவதைக் காணலாம். இத்தகைய முறையில் உயிர்த்துடிப்புடன் கூடியதாக அமைந்திருப்பதே ஒரு சிறந்த இலக்கியமாகும். இத்தகைய இலக்கியத்தை ஆக்கித் தருபவனே சிறந்த புலவனாவான் என்பதில் ஐயமில்லை. எனவே யாரும் எவ்வகையிலும் இலக்கியங்களை ஆக்கிவிடலாம். ஆனால் இவ் விலக்கியங்கள் உள்ளத் துடிப்பு, உணர்ச்சிப் பெருக்கு, சாதாரண வாழ்க்கை முறை என்பவற்றை அடிப்படை அம்சமாகக்



கொண்டு விளங்கும்போதுதான் இலக்கியங்கள் சிறந்ததோர் இலக்கியமாகக் கொள்ளப்படும். இவைகளை ஆக்கித் தருபவனே சிறந்த உண்மைப் புலவனாவான் என்று கூறமுடியும்.

இலக்கியம் என்பது மக்களின் வாழ்க்கையை ஒட்டியதாக இருக்கவேண்டும். அத்துடன் உள்ளத்துடிப்பு, உணர்ச்சிப் பெருக்குடையதாக அமைந்திருத்தல் வேண்டும். அதே வேளையில் மக்கள் வாழ்க்கையை இயன்ற அளவு சீர்திருத்தி அமைப்பதற்கு ஊக்கமளிக்க வல்லதோர் சாதனமாக அமைந்திருக்கும்போதே அது யாவராலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக அமைந்திருத்தல் வேண்டும். அத்துடன் இலக்கியம் என்பது தீயவற்றையும், நல்லவற்றையும் நடுநிலை நின்று ஆராய்ந்து தக்கதோர் தீர்க்கமான முடிவைக் கொள்ளுவதற்கு உதவியளிக்கும் சாதனமாக விளங்குகிறது. இலக்கியங்களே சிறுபான்மை பொழுது போக்கிற்கும், பெரும்பான்மை மக்கள் வாழ்க்கை நலத்திற்கும் உறுதுணை புரிதல்வேண்டும். இவைகளே உண்மை இலக்கியமாகும்.

சுருங்கக் கூறின், இலக்கியம் என்பது மக்கள் வாழ்க்கையை ஆதாரமாகக் கொண்டது; மக்களின் வாழ்க்கையைத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுவது; மக்களை மகிழ்விக்கவும் திருத்தவும் வல்லது; உள்ளத் தெளிவு, உணர்ச்சிப் பெருக்கு என்பனவற்றைச் சிறப்பான முறையில் மக்களுக்கு ஊட்டக் கூடியது. இதுவே சிறந்ததோர் இலக்கியமாகும்.

## தமிழர் திருநாள்

செல்வன் ந. கிரிதரன், யாழ்ப்பாணம்.

பொங்கல் திருநாள் ஒரு தமிழர் திருநாளாகும். இத் திருநாளில் தமிழ் மக்கள் எல்லோரும். முக்கியமாக உழவர்கள் யாவரும் உலகின் உயிர்நாடியான சூரியனுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுவடை செய்த நெல்லைக் குற்றிப் பொங்கல் பொங்கிப் படைப்பார்கள்.

உலகின் உயிர்நாடிகளில் ஒன்று சூரியன். மற்றது உழவர்கள். சூரியன் இல்லாவிடில் பயிர்கள் வளராது. ஆகவேதான் மக்கள் அறுவடை செய்ததும் சூரியனுக்கு அரிசியால் பொங்கல் பொங்கிப் படைக்கின்றார்கள். பொங்கல் திருநாளுடன் இணைந்துவரும் திருநாள்தான் மாட்டுப் பொங்கல். இத்திருநாளில் மாடுகளை நன்கு அலங்கரித்து பொங்கல் பொங்கி மாட்டுக்குப் படைப்பார்கள்.

பொங்கல் வருகிறதென்றால் அதனுடன் மங்கலமும் வருமென்று பெரியோர்கள் சொல்லுவார்கள். இத் திருநாளில் நங்கையர்கள் மண்வீடானால் சாணத்தால் மெழுகி, கோலம்போட்டு தத்தமது வீடுகளை அழகாகவும், எளிமையாகவும் வைத்திருப்பார்கள்.

சிறுவர்கள் இன்புற்று வெடிகளையும், மத்தாப்புகளையும் கொளுத்தி மகிழ்வார்கள். பொங்கல் திருநாள் புவி மகிழும் நன்னாளாகும். ஆகவே பொங்கல் திருநாள் வாழ்க! இத் திருநாளில் எங்கும் மகிழ்ச்சி நிலவுவதாக! தமிழ் மக்களாகிய எமக்கு இத் திருநாள் ஒரு வழி வகுக்கும் என்பதில் சந்தேகமில்லை.

15-2-71 வெற்றிமணி இதழில்
ஆரம்மாகின்றது
**மா. குலேந்திரன் எழுதும்**
**பஞ்சவர்ணக் கிளி**
— சிறுவர் தொடர் நவீனம் —
திடுக்கிடும் சம்பவங்கள் நிறைந்த
தீரச் செயல்கள் அடங்கிய கதை!
**இன்றே சந்தாவை அனுப்பிப் பிரதிகளைத்**
**தொடர்ந்து பெற்றுக்கொள்ளுங்கள்!**
— ஆசிரியர்



# கவிதை அரங்கம்



## கதிரோன் பவனி

-( திக்குவல்லை கமால் )-

சலசலென்று இசைபரப்பிக்
குளிரருவி பாட,
கலகலென்று தமிழ்மொழிந்து
காரிகையர் கூட,
வண்டுறங்கும் பூங்காவில்
வாழ்த்தொலிகள் முழங்க,
கண்டதனைப் பளபளக்கும்
தளிரசைந்து குலுங்க,
தேன்சிந்தும் மலர்வாசம்
தென்றலிலே ஆட,
வான்பூக்கள் முறுவலித்தே
வண்ணநகை மூட,
தண்மலரின் மென்னிதழில்
தூங்குபனி விலக,
மண்ணுலகின் இருட்போர்வை
மாயமென அகல,
அற்புதமாய்ச் செங்கதிரோன்
அழகுஅடி வானில்,
பொற்கதிர்கள் பூத்தொளிர்ந்து
பவனிவந்த தம்மா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம்பி கேள் . . .

கேணிப் பித்தன்

சிந்தனை செய்திடு திட்டங்கள் தீட்டிடு
சீர்வழி காட்டிடு வாய் — தம்பி
ஓர்வழி தேர்ந்திடு வாய்
இந்த உலகத்தில் எல்லோரும் வாழ்ந்திட
இன்றே வழி சமைப் பாய் — தம்பி
நன்றே செயல் புரிவாய்.

செப்படி வித்தைகள் சின்னத் தனங்களின்
செய்கை தனிலே தான் — தம்பி
பொய்கள் தனிலே தான்
உப்பிடு முலகமும் ஓடிடும் காலமும்
ஊண்டி நடக்கு தடா — தம்பி
தாண்டி மிதிக்கு தடா.

ஏமாற்று வித்தைகள் ஏமாளிப் பாவிகள்
கொஞ்சமோ தேர்ந்திடு வாய் — தம்பி
பஞ்சமோ கூறிடு வாய்
ஆமாமாம் போட்டுமே அஞ்சி நடுங்குவர்
ஆயிரம் பேர்க ளுண்டு — தம்பி
காயுதே நெஞ்சு கண்டு.

சாமி பெயரினில் சண்டாளர் கொண்டாட்டம்
சாதிப் பிரிவினை கள் — இங்கு
ஓதிப் புரியுது கள்
பூமிப் படியதில் பித்தர் திட்டங்கள்
போயும் மடிந் திடுமோ — அது
தேயும் நாள் எதுவோ?

பூத்துக் குலுங்கிடும் பூமரக் காவெலாம்
புன்னகை கண்டி டுவோம் — வாழ்வின்
இன்முகம் கண்டி டுவோம்
கூத்து நடத்திடும் கோமளச் சிட்டுப்போல்
கொள்கை தனை வளர்ப்போம் — அன்புச்
செல்வம் தனை வளர்ப்போம்.



# வேண்டாம்

—: கலைமேகம் இப்ருகிம் :—

தீயரை அடைய வேண்டாம்
தீமைகள் செய்ய வேண்டாம்
நேயரை வைய வேண்டாம்
நேர் வழிதவற வேண்டாம்

உளவுகள் பார்க்க வேண்டாம்
ஊரினைப் பகைக்க வேண்டாம்
களவுகள் செய்ய வேண்டாம்
கல்வியை வெறுக்க வேண்டாம்!

பேய்வழி நம்ப வேண்டாம்
பெண்மையை இகழ வேண்டாம்
தாய்மொழி துறக்க வேண்டாம்
தன்னலங் கருத வேண்டாம்!

# தமிழாலே இவ் வுலகை வெல்லு!

எஸ். ஹபீப்பு முகம்மது, மட்டக்களப்பு.

அன்பென்ற ஆயுதத்தை யேந்தி — இந்த
அகிலத்தில் காண்க சாந்தி
இன்பத்தைக் காண்க வேண்டி — உயர்
இனியகவி படிக்க ஊன்றி
உண்மையே எந்நாளும் பேசி — இந்த
உலகத்தை ஆளலாம் யோசி
நன்மையே எந்நாளும் செய்ய — எம்மை
நானிலம் வாழ்த்துமே உய்ய
காலத்தைப் பொன்னாக எண்ணு —உன்
கடமையில் தவறாமல் உன்னு
கோலத்தை விட்டுநீ தள்ளு — உயர்
கொள்கையே வழியாய்க் கொள்ளு
தீமையிலா நன்மொழி கேளு — தினம்
திருமறையின் போதனையில் வாழு
தாய்மையைப் போற்றியே நில்லு — செந்
தமிழாலே இவ்வுலகை வெல்லு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மங்களம் எங்கும் நிறைந்ததுவே!

— செல்வி நோ. இராசம்மா —

எத்தனை இன்னல்கள்
எத்தனை துன்பங்கள்
ஏற்று வளம் பெறக் காத்திருந்தோம்
ஏற்ற மடைந்திடப் பூத்திருந்தோம்
அத்தனை நிறைவுகள்
அத்தனை நினைவுகள்
முத்தாக ஒளி வீசும் நாளிதுவே
தைத் திங்கள் பொங்கல் நன்னாளிதுவே!

புத்தாடை அணிந்திட
பொன்னகை பூண்டிட
பொங்கல் நாள் வருமென்று காத்திருந்தோம்
புத்துணர்வால் ஏக்கம் நீக்கி நின்றோம்
சுற்றம் நிறைந்திட
ஒற்றுமை நிலைத்திட
பொங்கல் புது நாள் வந்ததுவே
மங்களம் எங்கும் நிறைந்ததுவே!

## மன்னிப்பார்!

—:— சாரதா கையூம் —:—

அப்பா என்னை அடியாரே
அம்மா என்னை வையாரே
தப்பா யெதுவும் செய்தாலும்
தண்டிக் காதே மன்னிப்பார்.

அடம் பிடித்து அழுகையிலே,
அன்பாய் என்னை முத்தமிட்டு,
படத்தைக் காட்டிக் கதைசொல்லி
பாலும் பழமும் தந்திடுவார்.

அன்னை செய்யும் அன்புக்கு,
அவனியில் ஈடு இணையுண்டோ
என்னே, புதுமை அவரன்பு
எத்தனை இன்பம் இப்பருவம்.



# மடை மாற்றம்

திருமதி பா. சண்முகராசா, பீ. ஏ., (இளவரசி)
செங்குந்தர் இந்துக்கல்லூரி.

முரளிக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை. யாவும் வெறுப்பைக் கொடுத்தது. வாசலில் படுத்திருந்த நாயை எட்டி உதைத்தான். அது ''வாள்'' என்று கத்திக்கொண்டு ஓடியது. ''ஏன்டா'' நாயை உதைக்கிறாய். உனக்கு எத்தனை தடவை சொல்வது நாயைக் காலாலே அடிக்காதே என்று'' உரத்த சத்தமாய் அம்மா கூறினாள். வீட்டிற்குள் வந்த முரளி மேசையில் கிடந்த புத்தகத்தை எடுத்துப் பார்த்துவிட்டு மேசையில் வீசினான். அது கீழே விழுந்தது. ''இங்கே பாரம்மா என்ரை புத்தகத்தை அண்ணா வீசி எறிகின்றான்'' என்று ஒப்பாரி வைத்தாள் அவன் தங்கை மாலா. ''டேய் முரளி'' என்று அம்மா கூவினாள். ''நான் வேண்டுமென்று எறியவில்லை அம்மா. மேசையில் போட்டேன். அது......'' முரளி சமாதானம் சொல்லும்பொழுதே அம்மா அதைக் காதில் வாங்காமல் ''ஆமடா, உனக்கு வரவர கண்மண் தெரியவில்லை. உங்கப்பன் விட்டுச் சென்ற ஆஸ்தியில் நீ என்னதான் செய்யாய்! ஐயோ! நான் படும் பாடு'' என்று பழைய பல்லவியை ஆரம்பித்தாள். முரளிக்குக் கோபம், வருத்தம் எல்லாம் சேர்ந்து வந்தன. இந்தத் தடிக் கழுதைதான் அம்மாவுக்குக் கவலையை மூட்டிவிட்டாள். இவளை என்ன செய்யலாம் என்று மாலாவின் பின்னலைப் பற்றினான். ''கழுதை பொய்சொல்லி பார்த்தாயா அம்மாவைக் கத்த வைத்துவிட்டாய்'' என்று அவன் கூறுமுன்பே ''அட கடவுளே, இவளை நான் என்ன செய்ய'' என்று தலையில் அடித்துக் கொண்டாள் அம்மா. முரளிக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. மாலாவின் கூக்குரலும், அம்மாவின் அழுகையும் அவனை முட்டி மோதி வெளியே தள்ளின. அவன் வெளியே ஓடினான். ஓடும் அவன் உள்ளமும் பின்நோக்கி ஓடியது.

முரளிக்கு அப்போது பத்துவயது. முரளியின் அப்பா கோவிந்தன் கம்பனியில் ஏற்பட்ட நட்டத்தினால் மனைவியையும் குழந்தைகள் இருவரையும் கண்கலங்க வைத்துவிட்டு தற்கொலை செய்து கொண்டார். ஏன்? எதற்கு? என்ற கேள்விகளைக் கேட்டும் அறிந்தும் புரிந்துகொள்ள முடியாத பையன் முரளி. தன் தாய் கண்கலங்கிச் சோருவதைப் பார்க்க அவன் உள்ளம் கொதித்தது. ஆனால் என்ன செய்யலாம். அமைதியும் ஆனந்தமும் நிறைந்த குடும்பம் அசைந்து ஆடிச் சரிந்தபொழுது அதன் பாரம் மூத்த புதல்வனாகிய முரளியை அழுத்தத் தொடங்கியது. படிப்பும் வேண்டாம் பதவியும் வேண்டாம் என்று கூலிவேலைக்குப் போயிருந்தால் அவன் மனம் அச்சூழலில் கொஞ்சமாவது சாந்தி அடைந்திருக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும். படிக்கவேண்டும். அதுவும் தமக்கிருந்த சொற்ப பணத்தில் குடும்பத்தையும் நடத்தி குழந்தைகளையும் படிப்பிக்க வேண்டும் என்பதையே குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்தாள் முரளியின் தாயார். பாடசாலைப் படிப்பிற்குப் பணம் வேண்டும்: அந்தந்த நேரத்தில் பிள்ளைகளுக்கு ஏற்படும் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும். பிரச்சினைகள் கூடின. தாய் அழுவாள். புலம்புவாள். முரளி அனைத்தையும் கேட்பான். அவன் சித்தம் நாளுக்குநாள் கற்பாறையாக மாறியது. வீட்டிலோ நிம்மதியில்லை. அம்மா எப்பொழுதும் எதையாவது குறித்து கலங்குவதும் கத்துவதுமாகவே இருந்தார். போதாக்குறைக்கு மாலா அவனை வீண் சண்டைக்கு இழுப்பாள். முரளி சண்டைக்குப் போவான். வருவான். வீட்டில் வேலைகள். அதாவது ஆண்கள் செய்யக்கூடிய கடின வேலைகள் அனைத்தையும் செய்தான். ஆனால் அம்மாவின் கவலையோ தீரவில்லை. சொற்பகாலம் அவன் செய்தித்தாளை விநியோகிக்கும் பையனாகக் கூடப் பணியாற்றினான். அதனால் சேர்ந்த பணத்தை தாயிடம் கொடுத்தபோது, அவள் அவனைப் பாராட்டாவிட்டாலும் திருப்தியைக் காட்டியிருக்கலாம். முரளிக்குச் சிறுவயதில் வாழ்க்கை சலித்துவிட்டது. சோர்வும் துயரமும் இதயத்தை வாட்டி எடுத்தன. படிப்பிலே காட்டிய அக்கறை நாளுக்கு நாள் குறைந்தது. படிப்பதனால் மட்டும் வேலை கிடைத்துவிடுமா? எத்தனை பட்டதாரிகள் வேலையின்றி வீதிகளிலே வளைய வரும்போது எனக்குமட்டும் வேலை கிடைத்துவிடுமா? என்ன படிப்பு எதற்குப் படிப்பு என்று அலுத்துக்கொண்டான். ஆனால் பாடசாலைக்குப் போவதை நிறுத்த அவன் மனம் ஒப்புக்கொள்ளவில்லை. அமைதியற்ற வீட்டிலே இருப்பதிலும் தன் வயதோடு ஒத்த மாணவர்களோடு சேர்ந்து - அரட்டை அடிப்பது. இன்பமாக இருந்தது. கல்வியில் காட்டிய ஊக்கமும் உற்சாகமும் முரளி பத்தாம் வகுப்பை அடைந்தபோது அவனைவிட்டு அகன்றன. சும்மா பொழுது போக்கிற்காக போய் வந்துகொண்டிருந்தான். ஆசிரியர்கள் சிலர் முதலில் கண்டித்தனர். அறிவுரை கூறினர். ஆனால் முரளியின் நடத்தையில் மாறுதல் இல்லை. கண்டிக்கும்போது குனிந்துநிற்கும் முரளி, அப் படலம் முடிந்தபின் பழைய பாத்திரமாகவே மாறிவிடுவான். ஆகவே ஆசிரியர்கள் இவனை ஒன்றும்செய்ய முடியாது என்று கைகழுவி விட்டனர். அதாவது ''இராசா நீ கடைசி வாங்கில் இருந்துகொள்'' என்று கூறாமல் கூறி அவனைக் கவனியாது விட்டனர். முரளிக்கு இது ரொம்பவும் பிடித்தது. வகுப்பிற்கு வந்தால் சும்மா அங்கும் இங்கும் பார்த்துக்கொண்டிருப்பான். மணியடித்ததும் தன் சகாக்களோடு செல்வான். அப்படியே நகரை இரண்டு மூன்று தடவை சுற்றியபின் வீட்டை அடைவான். அங்குதான் அமைதியுண்டா! ஏதோ பசிக்கு இருப்பதைப் போட்டு அருந்திவிட்டுத் திரும்பவும் வெளியே சென்றுவிடுவான். இப்படியே இது தொடர்ந்தால்......



ஆம் ஓடிக்கொண்டிருந்த அவன் உள்ளம் இக் கேள்வியைத்தான் கேட்டது. அவனால் விடையளிக்க முடியவில்லை. விருப்பமும் இல்லை. அனைத்தையும் அடித்து அழித்துத் தானும் அழியவேண்டும்போல இருந்தது. ஒருவரும் அவனைக்குறித்து அக்கறை காட்டவில்லை. ஒருவரும் அவனை ஏன் அப்படி நடந்துகொள்ளுகிறாய் என்று கேட்கவுமில்லை. முரளி தன் விருப்பம்போல் நடந்துகொண்டான்.

அன்று என்றைக்குமில்லாத அமைதி வகுப்பில் ஏற்பட்டது. ஆமாம் புதிய ஆசிரியர் ஒருவர் வந்திருந்தார். மாணவர்களின் தரத்தை அறிவதற்காகக் கேள்விகள் கேட்கப்பட்டன. ஒரு கேள்வி பின்வாங்கிற்கும் எய்யப்பட்டது. முரளி எழுந்தான். விடை தெரியவில்லை. அவனுக்குப் பயமும் ஏற்படவில்லை. சிரித்தான். அவன் சிரிப்பதைப் பார்த்த மற்ற மாணவர்களும் சிரித்தார்கள். ஆசிரியருக்குக் கோபம் வந்தது. ''ஏன் சிரித்தாய்'' என்றார். ''சிரிப்பு வந்தது'' என்றான் முரளி. அவனுடைய பேச்சை பெரிய ஜோக்காக எடுத்து எல்லோரும் சிரித்தனர். ''நான் என்ன கேள்வி கேட்டேன். அசடுமாதிரிச் சிரித்ததுமல்லாமல் உன்னுடைய சிரிப்பிற்கு விளக்கமும் கூறுகிறாயே, வெட்கமில்லையா'' என்று அருகிலிருந்த பிரம்பால் அடித்தார். அடிகள் கரங்களில் விழுந்தன. ஆனால் அவன் உடல் உள்ளம் அனைத்திலும் வலி ஏற்பட்டது. ஆனால் அவன் கண்கள் கலங்கவில்லை. டார் நல்லகாலமோ மணி அடித்தது.

முரளிக்கு இப்போ பாடசாலைக்குச் செல்வதற்கு விருப்பம் இல்லை. அங்கு சென்றால் புதிய ஆசிரியரின் வினாக்களுக்குப் பதில் அளிக்கவேண்டும். அவர் ஒவ்வொரு மாணவனையும் கேள்விகள் கேட்டுத் துளைப்பதாகவும் அவர் பாடத்தை அனைவரும் மிகுந்த கவனத்துடன் படிப்பதாகவும் அறிந்தான். முரளிக்குத் தன் நண்பர்களின் கூட்டுறவு மிகவும் தேவையாக விருந்தது, ஆனால் படிப்பதற்கோ மனம் இல்லை. எத்தனை நாட்களுக்குத்தான் வீதியைச் சுற்ற முடியும். வீட்டில் அம்மாவுக்கோ விஷயம் தெரியாது. என்றாலும் அம்மாவின் பழைய பல்லவியும் கூக்குரலும் குறையவேயில்லை.

அமைதியற்று, அலைந்துகொண்டிருந்தபொழுதுதான் அச் சந்திப்பு ஏற்பட்டது. எங்கோ சென்றுகொண்டிருந்த அவனை ஒரு கரம் தடுத்து நிறுத்தியது. திரும்பிய அவன் திடுக்கிட்டான். புதிய ஆசிரியரின் கண்கள் அவனை அளந்து கொண்டிருந்தன. ''ஏன் பாடசாலைக்கு வரவில்லை'' என்றார், அவனால் ஒன்றும் கூற முடியவில்லை. ''உன்னைப்பற்றியும் வராத மாணவர்களைப்பற்றியும் புதிய ஆசிரியர் விசாரித்தார்'' என்ற நண்பனின் கூற்றுத்தான் அவன் நினைவில் ஓடியது. ''நாளைக்கு வாரும்'' என்றார். ''அதிபர்...'' என்றான் முரளி. ''நான் சொல்லுகிறேன் நீர் வாரும்'' என்றார் புன்னகையுடன். முரளியின் தலை அசைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுநாள் பாடசாலை அலுவலகத்தின் உள்ளே கேட்ட உரையாடல் அவன் இதயத்தில் புதிய உணர்வையும், உற்சாகத்தையும் மலர்வித்தது.

"பொறுப்பை அவர்களிடம் கொடுப்பதா?" "ஏன் கொடுக்கப்படாது. பொறுப்பை கொடுப்பதனால் அவர்கள் உற்சாகமடைந்து தம் கடமையை நிறைவேற்றுவார்கள்" "சரி மிஸ்டர் நன்று. ஆனால் இம் மாணவர்கள் பொறுப்பற்றவர்களாக பாடசாலைக்கே சரியாக வராமல் நடந்துள்ளனர். இவ் விழாவோ மிக முக்கியமானது" "நீங்கள் சொல்வது சரி சார். ஆனால் எனக்கோ அவர்களின் திறமையில் மிகுந்த நம்பிக்கையுண்டு. அவர்களுடைய உணர்வுகளைச் சரியான பாதையில் திருப்பிவிட்டால், பலன் வெற்றி தான்" "சரி. உமது விருப்பத்தின்படியே இதனை நீரே எடுத்து நடத்தும்".

பாடசாலையில் நிகழவிருந்த விஞ்ஞானக் கண்காட்சிக்குப் பொறுப்பான மாணவர்களில் ஒருவனாக முரளி தெரிந்தெடுக்கப்பட்டான். முதன் முதலாக அக் கல்லூரியில் விஞ்ஞானக் கண்காட்சி வைக்கப்பட்டது. இரவு, பகல் பாராது ஓய்வின்றி உழைத்தனர் மாணவர்கள். அவர்கள் சேவை வீண்போகவில்லை. எத்தனையோ அரிய சாதனைகள் எடுத்துக் காட்டப்பட்டன. ஈற்றில் கண்காட்சி வெற்றிவிழாவாக நிறைவு பெற்றபோது, வித்தியாதிபதியின் பாராட்டுக்களை அதிபர் அடைந்தபோது முரளியின் விழிகள் நீரைப் பொழிந்தன.

ஆம், முரளியின் வாழ்க்கையில் ஒரு திருப்பம். அவன் காட்டிய உற்சாகமும், ஊக்கமும் இனியும் அவனைத் தொடரும். தன்னைப்போன்ற மாணவர்கள்மேல் அந்த ஆசிரியர் வைத்த நம்பிக்கை இன்று வெற்றிமணியாக ஒலிப்பதை அவன் உணர்ந்தான்.

**விற்பனையாளர்கள் தேவை!**

வெற்றிமணி விற்பனை செய்ய

**முற்பணம்கட்டக்கூடியவிற்பனையாளர்கள் தேவை**

பிரதிக்கு 5 சதம் கமிஷன் கொடுக்கப்படும்.

**விளம்பரம்சேகரித்துக் கொடுப்பவர்களுக்கு**

20 சத வீதக் கமிஷன் கொடுக்கப்படும்.

ஆசிரியர்



# அமரர் அழகிரிசாமிக்கு அஞ்சலி

— வே. பரமநாதன் —

மறைந்த மாமேதை கு. அழகிரிசாமி பண்டிதர் பரம்பரையைச் சேர்ந்தவர் அல்ல. ஆனால், இந்த நூற்றாண்டின் தலைசிறந்த எழுத்தாளர். பாரதியுகத்துக் கவிஞன். 'கம்பனோடும் கவி போயிற்று' என்று பாடிய பாரதியார் இன்று உயிருடனிருந்தால் 'பலே பாண்டியா' என்று தட்டிக் கொடுத்துப் பிரமரிஷிப் பட்டம் கொடுத்திருப்பார். புதுமைப்பித்தன் வழி வழி வந்த மரபு காத்த முற்போக்குக் கருத்துமிக்கவர். ஒரு படி மேலே சிறந்த இலக்கிய விமர்சகர், திறனாய்வாளர், ஒட்டு மொத்தமாகச் சொன்னால் எழுத்துலகத்திலே புதுப்பாதை வகுத்த சிற்பி. கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி அவர். காமஞ் செப்பாது கண்டது மொழிந்த கலைஞன். அவர் தமிழிலக்கியச் சோலையிலே நுழையாத துறையே இல்லை. சிறுகதை, நாவல், நாடகம், கவிதை மட்டுமல்ல, பழைய புதிய இலக்கியங்களின் பிரம்மாவும் கூட. இம்மட்டோடு நின்றுவிடவில்லை. பத்திரிகையாசிரியர், தமிழ்த் தொண்டர், பண்பான எழுத்தாளர், கண்மூடி வழக்கங்களைச் சாடிய சண்டமாருதம். சுருக்கமாகச் சொன்னால் யதார்த்த இலக்கிய கர்த்தா. முற்போக்குப் பேனா மன்னன். அவர் போகின்ற நாளில் வைத்துப் போன பொன்னான பாடல் இது.

போகின்ற நாளில் வைத்துப் போவதற்கு ஏதுண்டு?
ஏகும் தனிவழிக்கோ என் துணைக்கோ யாருண்டு?
வேகுதடா உள்ளம்! வெற்றி என்றே தோற்றுவிட்டு
நோகின்ற நெஞ்சோடு உலகை
நோக்கி உழலுகின்றேன்
மாய்கின்றேன் என்னுமிது என்ன மதிமயக்கம்
தாய் வயிற்றிலென்றோ தங்க வந்த நாளன்றே
மாய்ந்து விட்டேன் எந்தன் மரணத்தை வாழ்வென்று
ஏய்த்து விட்டார் இம்மனிதர்? இனிச்சாவு
எங்கிருக்கும் கொல்வதற்கே!

இந்த அருமையான கவிதை இருபது வருடங்களுக்கு முன் என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. பாடலின் பாவம் இன்றுவரை என் பிரக்ஞையைத் தட்டி எழுப்பி எதிரொலித்துக் கொண்டே இருக்கிறது. உள்ளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவர்ந்த பாடல்களை எப்பொழுதும் மறந்துவிட முடியவில்லை. இப் பாடலை அழகிரிசாமி ஏன் பாட வேண்டும் என்ற புதிருக்கு விடைகாண முடியவில்லை. கடலலைபோல் சிந்தனை ஓயவுமில்லை. முற்போக்கு உள்ளம் படைத்த எந்த எழுத்தாளனையும், வாசகர் வட்டத்தையும் இப் பாடல் சிந்திக்கவைக்கும். அவ்வளவு பச்சையான படைப்பு.

இப் பாடலில் வாழ்வின் விளிம்பிலே நிற்கும் அபலையின் குரலை - ஏக்கத்தை - ஏன் ஏமாற்றத்தை - அவநம்பிக்கையை - சலனமான நிம்மதியற்ற நிலையை - காண முடிகிறது. வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம். காயமே இது பொய்யடா - காற்றடைத்த பையடா! என்று எண்ணும் சித்தர் கணத்தைச் சேர்ந்தவரல்லர் கவிஞர். அப்பன் வெட்டிய கிணறு என்பதற்காக உப்புத் தண்ணீரைக் குடிக்காத பகுத்தறிவாளன். தமிழன் சொன்ன நிலையாமைக்குப் புறம்பே நமக்கென இயைந்த வாழ்வை முன்னேற்றப் பாதையில் இட்டுச் சென்று பூரண வாழ்வுக்காக மூச்சையும், பேச்சையும் சொல்லில் வடித்தவர். அப்படியான தனிவழி கொண்ட அழகிரியின் பாடலின் புதை பொருள் சங்க இலக்கியப் பாஷையிற் சொன்னால் இறைச்சியாகவே காணப்படுகிறது. அவ்வளவு முதற்றரமான பாடல்.

மறுபடியும் குழியிற் தள்ளி என்னை வருத்தப்படுத்த வேண்டாம் என்ற ஏக்கம் கீழைத்தேய தத்துவத்தில் இரண்டறக் கலந்து நிற்கிறது. ''ஆதலால் பிறவி வேண்டேன் அரங்கமா நகருளானே'' என ஆழ்வார்களும், ''இன்னமோரன்னை கருப்பையூர் வாராமல்கார்'' எனப் பட்டினத்தாரும், ''பிறவாமை வேண்டும்'' எனக் காரைக் காலம்மையாரும், ''இறவாமல் பிறவாமல்'' என அருணகிரியும், ''பிறவியை வேரறுப்பவனே'' என நாயன்மாரும், ''இன்னம் பிறப்பிக்க எண்ணாதே'' எனப் பின்வந்தோரும் இறைவனிடம் விண்ணப்பம் செய்யும் தத்துவ விசாரத்தின் பாரம்பரியத்துக்குப் புறம்பே அழகிரிசாமி போகின்ற நாளில் இப் பாடலை எமக்கு வைத்து எம்மை ஏய்த்துவிட்டாலும் இசை யென்னும் எச்சம் அவர் தனி வழிக்குத் துணையாயமைய; தமிழ் உள்ளளவும் நிலைத்துவிட்டது அன்னாரின் ஓவியம். வழிக்கும், விழிக்கும், மொழிக்கும், பழிக்



கும் துணையாக முருகனை முன்னிறுத்திய பாடலையும் இப் பாடலையும் ஒருமுறை சிந்தித்துப் பார்ப்போம். ஒருமுறை 'போகின்ற நாளில் வைத்துப்போன' பாடலைச் சிந்தியுங்கள். மிக ஆழமாகச் சிந்தியுங்கள். புதிய பாதைகளையும் உண்மைகளையும் தரிசிக்க முன்வாருங்கள்.

''அரியவற்று ளெல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்''

## 'ஆன்மா உணர்ந்தது'

நல்லைகணபதிப்பிள்ளை

தந்தையாரகிய உயிருக்கு இரண்டு புதல்வர்கள்; ஒருவன் கை; மற்றவன் வாய். ஒருநாள் சாப்பிட்டுக் கொண்டிருந்த வேளையில் கைக்கும் வாய்க்கும் பெருத்த ஒரு வாக்குவாதம் ஏற்பட்டுவிட்டது. என்னாலேதான் — நான் உணவைப் பதமாக அனுப்புவதனால்தான் எமது அப்பா நீண்ட காலம் உயிர் வாழ்கிறார்'' என்றது வாய்.

''என்னுடைய கையால் உனக்கு நான் உணவு தராவிட்டால் நீ எப்படி எமது அப்பாவுக்கு உணவளிக்க முடியும்? உணவை ஆக்கித் தருபவன் நான். எனவே என்னாலேதான் எமது அப்பா வாழ்கிறார்'' என்றதுகை. விவாதம் முற்றியதே தவிர ஓய்ந்தபாடில்லை. இதை உயிராகிய தந்தையார் அறிந்து விட்டார். அவரையும் அறியாமல் கோபம் பொங்கியது.

''அடே! இவர்களுக்கெல்லம் படியளப்பவனாக நான் இருக்க, இவர்கள் தங்களைப் பெரியவன் என்றல்லவா எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்? செய்கிறேன் வேலை'' உயிர் நினைத்தால் எதைத்தான் செய்யமுடியாது. ஆடாமல் அசையாமல், உழைக்காமல், அசைவையே நிறுத்திவிட்டது உயிர். கையும் வாயும் பலமிழந்து தவித்தன. இருவரும் சேர்ந்து - சத்தியற்று ஒருவர் முகத்தை ஒருவர் பரிதாப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகப் பார்த்துக் கொண்டனர். அப்போது பெருத்ததோர் சிரிப்பொலி கேட்டு இருவரும் திரும்பினர். உயிர் நின்று கொண்டிருந்தது.''

''இப்போது தெரிகிறதா யார் பெரியவன் என்று நான் இல்லாவிட்டால் உங்களால் என்னதான் செய்ய முடியும்?'' என்றது தன்னைப் பெற்ற ஒருஇறைவனும் இருக்கிறுன் என்பதை உணராத உயிர். உயிர் ஆணவங் கொண்டு திரிவதை உயிரையும் பெற்றெடுத்த தந்தையாகிய இறைவன் அறிந்து கொண்டார். சில நாளின்பின்........

உணவின்றி உறக்கமின்றி உயிர்பட்டினியால் வாடியது. உயிருக்கு உயிரே இல்லை; அசைவே இல்லை. இன்றைக்கோ? நாளைக்கோ எமலோகம் என்ற நிலையில் உயிர் பட்டினியால் - மெலிந்து வாடியது. உயிர் படுக்கையிலேயே கிடந்தது. படுக்கையில் கிடந்து புரளும் போது தன்னையுமறியாமல் ''இறைவன்'' என்றது உயிர். அப்போதுதான் உயிருக்கு, ''எம்மிலும் மேலான ஒரு சக்தி எம்மைக் கட்டியாழுகின்றது'' என்ற ஞானம் வெளுத்தது.

வறுமையிலும், பட்டினியிலும், துன்பத்திலும் உழலும் போதுதான் ஆன்மா பரம்பொருளை உணர்கிறது.

''ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உவப்பிலா ஆனந்தமாய''

என்ற மாணிக்கவாசகரின் திருவாசக வரிகள் எமக்கு நினைவுக்கு வருகின்றன அல்லவா?

## நன்றி

வெற்றிமணியில் தொடர்ந்து தங்கள் விளம்பரங்களை வெளியிட்டு ஆதரித்துவரும் ஸ்தாபன உரிமையாளர்களுக்கும் அவ்வப்போது விளம்பரங்கள் தந்துதவும் அன்பர்களுக்கும், கதை, கட்டுரை, கவிதைகள் அனுப்பிவருகிறவர்களுக்கும், வெற்றிமணிப் பிரதிகளை விற்றுவரும் விற்பனையாளர்களுக்கும், பிரதிகளை வாங்கி ஆதரிக்கும் அன்பர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்ருேம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அன்பு வெளியீடு' தரும் விருந்து!

இன்னும் வாசிக்கவில்லையா?

புதுமைலோலன் எழுதிய
கருகிய ரோஜா — 50 சதம்
(குறுநாவல்)

அகஸ்தியர் எழுதிய
இருளினுள்ளே...... — 2-00
(3 குறுநாவல்கள்)

எஸ். பி. கிருஷ்ணன் எழுதிய
ஒன்றே தெய்வம் — 2-00
(சிறுகதைகள்)

தில்லைச் சிவன் யாத்த
தாய் — 2-00

அனுப்பும் செலவு இலவசம்.

எழுதுங்கள் : அன்பு புத்தகசாலை,
27-D, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

எமது ஆதரவாளர்களுக்கு
பொங்கல் நல்வாழ்த்துக்கள்
உரித்தாகுக!

கதிர் ஹாட்வெயர்ஸ்
11/1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

இப் பத்திரிகை, சக்தி அச்சகத்தினருக்காக, பொன் இராசரத்தினம் அவர்களால் யாழ், ஸ்ரான்லி வீதி, 253 1/1 இலக்கத்திலுள்ள சக்தி அச்சகத்தில் 15-1-71இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## சுன்னாகம், வட இலங்கைத் தமிழ்நூற் பதிப்பக
## பாடசாலைப் புத்தக வெளியீடுகள்.

| | |
|---|---|
| அரிவரி பாலபோதினி | 75 |
| தமிழ் நெடுங்கணக்கு(2நிற) | 30 |
| ,, ,, தடித்த அட். ,, | 1-00 |
| தரம் 1 பாலபோதினி | 75 |
| அம்பிப் பாடல் | 2-00 |
| தரம் 2 பாலபோதினி | 70 |
| சைவசமய ,, | 70 |
| சுகாதார ,, | 90 |
| நாமும் நமது சூழலும் | 1-50 |
| மொழிப் பயிற்சி I | 60 |
| சரித்திர கதாவாசகம் | 60 |
| பூமிசாஸ்திரம் | 60 |
| தரம் 3 பாலபோதினி | 80 |
| சைவ சமய ,, | 80 |
| சுகாதார ,, | 90 |
| நாமும் நமது சூழலும் | 1-75 |
| மொழிப் பயிற்சி II | 90 |
| சரித்திர கதாவாசகம் | 75 |
| பூமிசாஸ்திரம் | 60 |
| தரம் 4 பாலபோதினி | 1-00 |
| சைவசமய ,, | 90 |
| சுகாதார போதினி | 1-25 |
| விவசாய ,, | 1-00 |
| நாமும் நமது சூழலும் | 2-00 |
| மொழிப் பயிற்சி III | 1-00 |
| சரித்திர கதாவாசகம் | 90 |
| பூகோளத் தொடர் சாஸ். | 1-00 |
| தரம் 5 பாலபோதினி | 1-00 |
| சைவசமய ,, | 1-10 |
| சுகாதார போதினி | 1-50 |
| விவசாய ,, | 1-00 |
| நாமும் நமது சூழலும் | 2-50 |
| மொழிப் பயிற்சி IV | 1-10 |
| English Composition Beginners | 80 |
| சரித்திர கதாவாசகம் | 1-50 |
| பூகோளத்தொடர் பூமி. | 1-25 |
| தரம் 6 பாலபோதினி | 1-10 |
| சைவ சமய ,, | 1-25 |
| சுகாதார போதினி | 2-00 |
| விவசாய ,, | 2-50 |
| பொதுவிஞ். போதினி | 3-50 |
| புவியியல் | 3-00 |
| ,,படவேலைப் பயிற்சி | 1-25 |
| கட்டுரை மஞ்சரி | 1-50 |
| சரித்திரச் சுருக்கம் | 2-50 |
| மொழிப் பயிற்சி V | 1-20 |

| | |
|---|---|
| மணிமேகலை(உப பாடம்) | 1-00 |
| தமிழ் மஞ்சரி I | 1-10 |
| தரம் 7 பாலபோதினி | 1-20 |
| சுகாதார போதினி | 2-00 |
| விவசாய ,, | 2-25 |
| பொது விஞ். ,, | 4-75 |
| புவியியல் 1-ம் பருவம் | 1-25 |
| ,, படவே. பயிற்சி | 1-50 |
| சரித்திரச் சுருக்கம் | 3-50 |
| மொழிப் பயிற்சி VI | 1-75 |
| தமிழ் மஞ்சரி II | 1-20 |
| தரம் 8 | |
| விவசாய போதினி | 3-50 |
| பொதுவிஞ் ,, | 4-00 |
| சுகாதார ,, | 2-50 |
| புவியியல் | 4-00 |
| ,, படவேலைப் பயிற்சி | 2-25 |
| சைவசமய பாட.தொகு. | 1-75 |
| சரித்திரச் சுருக்கம் | 3-75 |
| மொழிப் பயிற்சி VI | 1-75 |
| இலங்கைச் சரித்திர வினா விடை | 1-50 |
| கணக்குப் பதிவு நூல் | 4-00 |
| English Composition-Ju. | 1-50 |
| தரம் 9 கட்டுரை மஞ்சரி | [illegible]0 |
| சுகாதார போதினி I | [illegible] |
| சுகாதாரவியல் வினாவிடை | 1-[illegible] |
| ஆட்சி இயல் | 6-0[illegible] |
| மொழிப் பயிற்சி | 2-5[illegible] |
| கணக்குப்பதிவு நூல்(உயர்) | 5-50 |
| A Guide to Translation I | 1-50 |
| கணித வாய்பாடு | 50 |
| தரம் 10 சுகாதாரபோதினி II | 4-50 |
| இலக்கிய வினாவிடை | 2-50 |
| இந்துசமய ,, | 1-75 |
| சுகாதார வினாவிடை | 2-75 |
| A Guide to Translation II | 2-50 |
| கணக்கியல் I | 4-50 |
| விரைவு மீட்டற் பயிற்சி பௌதிகம் I | 3-25 |
| வி.மீ.ப. தூயகணிதம்I | 4-90 |
| கணித விஞ். வாய்பாடு | 1-25 |
| இக்கால வாணிப முறை | 6-50 |
| தமிழ்மொழிப் பாடப் பயிற்சிகள் I&II | 3-00 |
| Test Papers in English | 3-00 |

**தனலக்குமி புத்தகசாலை, சுன்னாகம்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org